வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 09.10.2021 சனிக்கிழமை | இதழ் : 308 | பக்கங்கள் : 16




# மார்ச் மாதத்துக்கு முன் மாகாண சபை தேர்தல்!

## பஸில் ராஜபக்ஷ அறிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 09

நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைகளுக்கான தேர்தலை அடுத்தாண்டு மார்ச் மாதத்துக்கு முன்பாக நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக பாராளுமன்ற தெரிவுக் குழு கூட்டத்தில் நேற்று அறிவித்தார்.

15

# கொரோனா தொற்றால் மேலும் 38 பேர் மரணம்!

கொழும்பு, ஒக். 09

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 38 பேர் உயிரிழந்தனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில்

15

# 746 தொற்றாளர்கள் நேற்று அடையாளம்

கொழும்பு, ஒக். 09

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று உறுதியான மேலும் 746 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின்

15

# “விகிதாசார பிரதிநிதித்துவ தேர்தல் முறையே நாட்டுக்கு பொருத்தம்”

கொழும்பு, ஒக். 09

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை நாட்டுக்குப் பொருத்தமானது என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப்

15

# வடக்கு-கிழக்கை அபிவிருத்தி செய்யும் வழிமுறைகள் கூட்டமைப்பிடம் உண்டு

## சபையில் கூறினார் சாணக்கியன் எம்.பி.

கொழும்பு, ஒக். 09

வடக்கு - கிழக்கிலுள்ள வளங்களை வைத்துக்கொண்டு அந்த பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக் கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடம் உள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டை நடத்தி

15

# புலிகளின் சொத்துக்கள் எதுவும் என்னிடமில்லை!

## கிளிநொச்சியில் கூறினார் கே. பி.



கிளிநொச்சி, ஒக். 09

“தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் சொத்துகள் எதுவும் என்னிடம் இல்லை. இறுதிபோரின்போது நான் மலேசியாவில் தலைமறைவாகியிருந்தேன்.”

- என்று புலிகள் அமைப்பின் சர்வதேச வலையமைப்பின் பிரதானியாக கருதப்பட்ட கே.பி. எனப்படும்

15

# 56 கர்ப்பவதிகள் தொற்றுக்கு பலி!

கொழும்பு, ஒக். 09

நாட்டில் கொரோனா தொற்றால் 56 கர்ப்பவதிகள் உயிரிழந்தனர் என்று சுகாதார அமைச்சின் தாய் மற்றும் சேய் நல இயக்குநர் மருத்துவர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே

15

# பால்மா விலை அதிகரிப்பு திங்களன்றே இறுதி முடிவு!

## புதன்கிழமை பால்மா விநியோகம்

கொழும்பு, ஒக். 09

இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை அதிகரிப்பது தொடர்பான இறுதி முடிவு திங்கட்கிழமையே அறிவிக்கப்படும் என்று பால் மா இறக்குமதியாளர்கள் தெரிவித்தனர்.

கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கொள்கலன்களை இறக்குமதி செய்வதற்காக 11 இலட்சம் டொலர்கள் விடுவிக்கப்பட்டது. இதன்மூலம்

15

# இரசாயன உர தடைக்கு ஆளுங்கட்சிக்குள் எதிர்ப்பு

## 50 எம். பிக்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஒக். 09

இரசாயன உரங்களுக்கு தடை விதிப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்த தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, அரசின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த கடிதத்தில்

15

# பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஞானசாரர் வழியிலேயே செல்கிறார்

## குற்றஞ்சாட்டுகின்றார் சரத் பொன்சேகா



கொழும்பு, ஒக். 09

பயங்காவாதம் தொடர்பில் மீண்டும்பேசி , மக்களை அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கி அரசியல் அதிகாரங்களை தக்க வைத்துக்கொள்ளும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றனவென குற்றம் சாட்டிய ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ஞானசாரரின் வழியிலேயே தற்போதைய பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் போகின்றார். இது குரங்கின் கையில்

15




உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

'ஈழநாடு' பத்திரிகைக்கும் பொன்னம்பலம் குடும்பத்திற்கும் ஒரு வரலாறு உண்டு.

அப்போது தமிழ் அரசுக் கட்சி தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய கட்சியாக வளர்ந்திருந்த காலம்.

ஒரு தேர்தல் காலத்தில் பத்திரிகையாளர்களுக்கு அறிக்கை அனுப்பிய தமிழ்க் காங்கிரஸ் தந்தை அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம், 'ஈழநாடு' தமிழ் அரசின் ஊதுகுழல் என்று வர்ணித்திருந்தார்.

ஆனால், அந்தக் காலத்திலேயே தமிழ் அரசுக் கட்சியும் ஈழநாடு காங்கிரஸூக்கு ஆதரவாக இருக்கிறது என்று குற்றம்சாட்டியது.

ஈழநாடுவின் இருபத்திஐந்தாவது ஆண்டு மலரில், இந்த சம்பவத்தை ஈழநாடுவின் அப்போதைய ஆசிரியர் கோபு நினைவுகூர்ந்திருந்தார்.

பின்னர், ஜி. ஜியும் தந்தை செல்வாவும் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியை ஆரம்பித்த பின்னர், தொகுதி ஒதுக்கீட்டில் முரண்பட்ட ஜி. ஜியின் புதல்வர் குமார் பொன்னம்பலம், தனித்துப் போட்டியிட்ட போது, தனது தேர்தல் பிரசாரத்தின்போது ஈழநாடு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஊதுகுழல் என்று வர்ணித்தார்.

ஆனால், தமிழர் விடுதலைக் கூட்டணியோ, ஈழநாடுவின் பிரதம செய்தியாளராக இருந்த கார்த்திகேசு அப்புக்காத்துவின் மகன் யோகநாதனின் எழுத்துக்களைப் பார்த்து (கார்த்திகேசு காங்கிரஸ்காரர் என்பதால்) ஈழநாடு காங்கிரஸூக்கு ஆதரவாக இருப்பதாகக் குற்றம்சாட்டியது.

இப்போது அவரின் புதல்வர் கஜேந்திரகுமார் அதேபாணியில், ஈழநாடுவை வர்ணித்திருக்கிறார்.

யாழ்ப்பாணத்தில் நடந்த இந்திய வெளியுறவுச் செயலருடனான விருந்துபசாரத்தில் கலந்துகொண்ட கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பதின்மூன்றாவது அரசியலமைப்பு திருத்தத்தை எதிர்க்கவில்லை என்றும் அங்கு கலந்துகொண்டவர்கள் அதற்கு ஆதரவாகக் கதைத்தபோதிலும் அவர் அதனை எதிர்க்காதது அவரும் இந்தியாவிடம் நல்ல பெயரை வாங்குவதற்கான முயற்சியா என்றும் ஈழநாடு ஆசிரியத் தலையங்கம் கேள்வி எழுப்பியிருந்தது.

இதனைக்கண்டு கொதித்துப்போன கஜேந்திரகுமார், அவசரம் அவசரமாக செய்தியாளர்களை அழைத்து ஈழநாடுமீது பாய்ந்திருக்கிறார்.

தனது நிலைப்பாடு, ஒற்றையாட்சிக்குள் தீர்வு இருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதை தான் தெளிவாக அந்தச் சந்திப்பில் தெரிவித்தாரென சொல்லும் கஜேந்திரகுமார், தான் பதின்மூன்றை நிராகரிப்பதாக சொன்னதாகவும் அங்கு சொல்லவில்லை. ஆனால், ஒற்றையாட்சிக்குள் தீர்வை ஏற்கவில்லை என்றால் அதன் அர்த்ததம் 13ஐ ஏற்கவில்லை என்பதுதான் என்றும் கூறியிருக்கிறார்.

பதின்மூன்றை ஏற்றுக்கொண்டாலும் தொடர்ந்து நாங்கள் சமஷ்டியை நோக்கி பயணிப்போம் என்று அவர் கூறுகிறாரெனவும் அதனை எடுத்துக்கொள்ளலாம் என்பதை ஏனோ அவர் புரிந்துகொள்ள தவறிவிட்டார்.

இப்போது அங்கு நடந்தது பற்றியல்ல நாம் சொல்லவருவது,

ஈழநாடு ஆசிரியத் தலையங்கம் எழுதுபவர் ஆசிரியர் அல்ல என்றும் எழுதுபவரை தனக்குத் தெரியும் என்றும் கூறிய அவர், தான் கற்பனையில் நினைக்கின்ற அந்த நபர் பற்றியும் சோதிடம் சொல்வதுபோல சொல்லிக்கொண்டிருந்தார்.

ஓர் அரசியல் தலைவர், அதுவும் மற்றைய எல்லாத் தமிழ்த் தேசியத் தலைவர்களும் தவறானவர்கள், நான் மாத்திரமே சரியான தலைமையை தமிழர்களுக்குக் கொடுக்கின்றேன் என்று கூறிக்கொண்டிருக்கின்ற கஜேந்திரகுமார், ஒரு பத்திரிகை பற்றி கிளிச் சோதிடம் சொல்வது எந்த வகையில் நியாயமானது என்பது தெரியவில்லை!

**- ஊர்க்குருவி**

# வடக்கில் நேற்று 28 தொற்றாளர்கள்!

யாழ்ப்பாணம், ஒக். 09

வவுனியாவில் 8 பேர், யாழ்ப்பாணத்தில் 7 பேர் என வடக்கு மாகாணத்தில் நேற்று 28 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர்.

யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வுகூடத்தில் நேற்று 151 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில், 28 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி, வவுனியா மருத்துவ அதிகாரி பிரிவில் 7 பேருக்கும், வவுனியா பொது மருத்துவமனையில் ஒரு வருக்குமாக வவுனியா மாவட்டத்தில் 08 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

யாழ். போதனா மருத்துவமனையில் 4 பேருக்கும், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 2 பேருக்கும், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் ஒருவருக்குமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 7 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

மன்னார் பொது மருத்துவமனையில் 6 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் மண லாறு (வெலிஓயா) மருத்துவ அதிகாரி பிரிவில் 3 பேருக்கும், முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 2 பேருக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்குமாக 6 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டது. கிளிநொச்சி மாவட்டத்தில் பொது மருத்துவ மனையில் ஒருவர் தெற்றாளியாக அடையாளம் காணப்பட்டார். (ஐ)

## முல்லைத்தீவில் கொரோனாவால் ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 09

கொரோனா தொற்றால் முல்லைத்தீவில் நேற்று ஒருவர் உயிரிழந்தார்.

முல்லைத்தீவு பொது மருத்துவமனையின் வெளிநோயாளர் பிரிவு ஊடாக இறந்தவரின் உடலில் சேகரிக்கப்பட்ட மாதிரிகள் யாழ். போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அங்கு இடம்பெற்ற பரிசோதனைகளிலேயே உயிரிழந்தவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இவ்வாறு உயிரிழந்தவர் பாலசிங்கம் சீதை (வயது 79) என்பவராவார். (ஐ)

## கசிப்பு காய்ச்சியவர் கிளிநொச்சியில் கைது!

கிளிநொச்சி, ஒக். 09

இளைஞர்களின் முன்மாதிரியான செயல்பாட்டால் கசிப்பு காய்ச்சிய ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி - திருவையாறு பகுதியிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

திருவையாறு பகுதியில் கசிப்பு காய்ச்சிய இடம் ஒன்றை அப்பகுதி இளைஞர்கள் சுற்றி வளைத்து பிடித்தனர். அவர்கள் பொலிஸாருக்கு தகவல் அளித்தபோதும் அவர்கள் அங்கு செல்லவில்லை. இந்த நிலையில் விசேட அதிரடிப் படையினருக்கு தகவல் அளிக்கப்பட்டது.

அங்கு சென்ற விசேட அதிரடிப் படை 200 லீற்றர் கோடா, 30 போத்தல் கசிப்பு மற்றும் கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களை கைப்பற்றியதுடன், சந்தேகநபர் ஒருவரையும் கைது செய்தனர். (ஐ)



## தாவடியில் தாக்குதல்!

யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ்ப்பாணம் - தாவடியில் வீடு ஒன்றின் யன்னல் கண்ணாடிகளை கும்பல் ஒன்று சேதப்படுத்தி விட்டு தப்பியோடியுள்ளது.

நேற்று மாலை 6 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த கும்பலே தாக்குதலை நடத்தி விட்டு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### கல்வி TV CHANNEL-1 — 09.10.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

### கல்வி TV CHANNEL - 2 — 09.10.2021 சனிக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu 09.10.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், புரட்டாசி 23

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370**

# மாகாண சபை தேர்தல்?

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் காலம் கடந்துள்ள மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கின்றார். அண்மையில் கூட்டமைப்பினரும் இந்த விடயத்தை இந்திய வெளிவிவகார செயலரின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருந்தனர். அரசாங்கம் திட்டமிட்டு மாகாண சபைத் தேர்தலை பிற்போட்டு வருவதாக குற்றம்சாட்டியிருந்தனர்.

நீண்ட காலமாக, தெரிவுசெய்யப்பட்ட அரசியல் பிரதிநிதித்துவம் இல்லாமல் ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ், மாகாண சபைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. இலங்கையின் ஏனைய மாகாண சபைகளுக்கும், வடக்கு - கிழக்கு மாகாண சபைகளுக்கும் இடையில் ஓர் அடிப்படையான வேறுபாடுண்டு. ஏனைய மாகாண சபைகள் ஆளுநர்களின் நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றபோது, அது வெறுமனே ஒரு நிர்வாக பிரச்னை மட்டும்தான் ஆனால், வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் ஆளுநர்களின் அதிகாரத்தின் கீழ் மட்டும் இருக்கின்றபோது, அது ஓர் அரசியல் விவகாரம்.

ஏனெனில், இலங்கை தீவை பொறுத்தவரையில் தமிழ் மக்கள் அதிகாரமற்ற தரப்பாக இருப்பவர்கள். 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் இருக்கின்ற மாகாண சபைகள்தான் ஓரளவாவது தமிழ் மக்களுக்கான அதிகாரத்தை உறுதிப்படுத்துகின்றது. அங்கும் அவர்களுக்கான குரல் இல்லாதபோது, தமிழ் மக்கள் முற்றிலும் குரலற்றவர்களாகி விடுகின்றனர். வடக்கு - கிழக்கு மாகாண சபைகள் முற்றிலும் ஆளுநர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கின்றபோது, தமிழர் நிலத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் எதிலும், தமிழ் மக்கள் தலையீடு செய்ய முடியாது. கிழக்கு மாகாண மேய்ச்சல் தரை விவகாரம் இதற்கு சிறந்த உதாரணம். கிழக்கு மாகாண சபையில் தமிழ் மக்களின் பிரதிநித்துவம் இல்லாதபோதுதான் ஆளுநரால் தன்னிச்சையான முடிவில் விடயங்கள் கையாளப்பட்டன.

வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான ஆளுநர்களுக்கும் ஏனைய மாகாணங்களின் ஆளுநர்களுக்கும் இடையிலும் ஓர் அடிப்படையான வேறுபாடுண்டு. அதாவது, வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கான ஆளுநர்கள் மாகாண சபையின் வில்லன்களாக நோக்கப்படுகின்றனர். ஆனால், அந்த பிரச்னை ஏனைய மாகாண சபைகளில் இல்லை. தமிழ் தேசியத்தை பிரதிநிதித்துவம் செய்யும் தலைமைகளுக்கும், மத்தியில் இருக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் காணப்படும் பாரதூரமான முரண்பாடுகளே இதற்குக் காரணம்.

13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தி, ஆளுநர்களின் கைகளுக்கு பூட்டுப் போடும் வரையில் இந்தப் பிரச்னை தீரப் போவதில்லை. அதேவேளை கடந்த காலத்தில் மாகாண சபைகளை உச்சளவில் பயன்படுத்துவதில் தமிழ் பிரதிநிதிகளும் வினைத்திறனுடன் செயலாற்றவில்லை என்னும் விமர்சனத்தையும் ஒரேயடியாக மறுதலித்துவிட முடியாது. இருக்கின்ற அதிகாரங்களை உச்சளவில் பயன்படுத்த வேண்டும் என்னும் நிலைப்பாட்டில் தமிழ் கட்சிகளிடையே கருத்தொருமித்த வேலைத்திட்டமும் இணக்கப்பாடும் இல்லை. இதுவும் ஒரு பிரச்னைதான்.

நீண்டகாலமாக மாகாண சபை தேர்தல்களை பிற்போட்டிருப்பதானது, தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு நிர்வாகப் பிரச்னையல்ல என்பதை, அரசாங்கம் புரிந்துகொள்ள வேண்டும். மாகாண சபை தேர்தல் என்பது அடிப்படையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஓர் உரிமைசார்ந்த பிரச்னை. கொரோனா பெருந்தொற்றை காரணம் காட்டி, தொடர்ந்தும் தேர்தல்களை பிற்போடுவது சரியானதோர் அணுகுமுறையல்ல.

இந்த ஆண்டிலாவது அரசாங்கம் தேர்தல்களை நடத்துவதற்கு முன்வர வேண்டும். சர்வதேச சமூகம் இது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையிலும், மாகாண சபை தேர்தல்களை விரைவில் நடத்தி, ஒரு வினைத்திறன்மிக்க மாகாண சபை நிர்வாகத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கின்றது. மனித உரிமைகள் பேரவையின் பிரேரணையில் இந்த விடயம் வலியுறுத்தப்பட்டிருப்பது, தமிழ் மக்களின் உரிமைசார் அரசியலில் மாகாண சபைக்குள்ள இடத்தை உறுதிப்படுத்துகின்றது.

# எல்லை மீறும் இந்திய மீனவர்கள்!

- அலசுவது இராஜதந்திரி -

*இந்திய மீனவர்கள் பாக்கு நீரிணையைத் தாண்டி வட இலங்கை நீர் பரப்புக்குள் பிரவேசிக்கும் பிரச்னை மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இந்திய வெளியுறவு அமைச்சர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லாவின் கவனத்துக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளது. மீன்பிடித்துறை அமைச்சர் என்ற ரீதியல் மட்டுமல்லாது வடக்கே யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையிலும் இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் பிரச்னைக்கு முடிவு காண வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளாகியுள்ளார்.*

*அமைச்சர் தேவானந்தா ஒரு சிறந்த நீச்சல் வீரராவார். இந்தியாவில் எண்பதுகளில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் அங்கம் வகித்தவேளை பாக்கு நீரிணையில் தமது சகாக்களுடன் படகொன்றில் பயணித்து இலங்கை வந்த வேளை அப்படகு கடலில் கவிழ்ந்தபோது டக்ளஸ் தேவானந்தா பாக்குநீரிணையில் நீண்ட தூரத்தை கடந்து இலங்கைக் கரையை வந்தடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இந்நிலையில் தற்போது பாக்கு நீரிணையில் இந்திய - இலங்கை மீனவர்களிடையே மீன்பிடித்தல் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையை அணுகுவது தொடர்பில் பாக்கு நீரிணையின் ஆழ அகலத்தையும் அறிந்தவராக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருப்பதையே அறிய முடியும்.*

*2009ஆம் ஆண்டு வடக்கு - கிழக்கு யுத்தம் முடிவுக்கு வருவதற்கு முன்னர் இந்திய மீனவர்கள் வட கடல் எல்லையை அண்டிய பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர். அச்சமயம் வடக்கு - கிழக்கு மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தனர். ஏனெனில், வடக்கு - கிழக்கின் தீவிரவாத அமைப்புகளின் படகுகள் மூலமான, இந்தியாவுக்கும் இலங்கையின் வட பகுதி கரையோரப் பகுதிகளுக்கும் இடையிலான நடமாட்டம் அதிகமாக காணப்படடமையால் மீன்பிடி நடவடிக்கைகள் தொடர்பாக நிறையவே கட்டுப்பாடுகள் காணப்பட்டிருந்தன.*

*இதன்காரணமாக வடபகுதி மீனவர்களின் மீன்பிடித்தலுக்கான தூரங்கள் பெரிதும் கடற்படையினரால் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. இதனால், வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருந்தன. அத்துடன், அவர்களில் அநேகர் கடற்படையினரின் கெடுபிடிகளால் உயிரிழந்த சம்பவங்களும் நிகழ்ந்தன. இத்தகைய பின்னணியிலேயே இந்திய மீனவர்கள் பாக்கு நீரிணையில் இலங்கை நீர்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் நடவடிக்கைகளை அதிகரித்திருந்தனர்.*

*ஆனால், தற்போது வடபகுதி மீனவர்கள் யுத்தம் முடிவுக்கு வந்த கடந்த பத்து வருடங்களில் தமது மீன்பிடி நடவடிக்கையை வட கடலில் படிப்படியாக விஸ்தரித்து வரும் நிலையில் இந்திய மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி செயல்பாடுகள் வடபகுதி மீனவர்களுக்கு குறுக்கீடுகளை ஏற்படுத்துவனாக இருக்கின்றன.*

*மன்னார் கடற்பரப்பிலிருந்து திருகோணமலை கடல் பிரதேசம் வரை இந்திய மீனவர்களின் ஊடுருவல் விரிவடைந்துள்ளது. இந்திய மீனவர்கள் வெறுமனே இலங்கையின் வடபகுதி நீர்பரப்புக்குள் ஊடுருவி மீன் பிடிப்பதோடு மட்டும் நின்று விடவில்லை. பெறுமதி வாய்ந்த வடபகுதி மீனவர்களின் வள்ளங்கள் கூட இந்திய மீனவ வள்ளங்களால் அடிக்கடி சேதமாக்கப்படுவதோடு இலங்கை மீனவர்களின் பெறுமதிமிக்க வலைகள கூட இந்திய மீனவர்களின் ட்ரோலர் மீன்பிடி படகுகளால் வெட்டப்பட்டும் வருகின்றன.*



*ஒரு தடவை தற்போதைய வெளிநாட்டமைச்சின் செயலாளரும் முன்னாள் கடற்படை தளபதியுமான அட்மிரல் ஜயந்த கொலம்பகே இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கும் பிரச்னை குறித்து கருத்து வெளியிட்டபோது இந்திய மீன்பிடிபடகுகள் வட கடலில் கடல்வாழ் உயிரினங்கள் மற்றும் ஆழ்கடல் வளங்களையும் துவம்சம் செய்கின்றன என்று குறிப்பிட்டிருந்தார்.*

*இந்திய ட்ரோலர் படகுகள் ஆழ்கடலில் கடல் படுக்கையை ஊடுருவிச் செல்வதால் மீன்களின் இனப்பெருக்கம் குன்றுவதோடு கடல்வாழ் தாவரங்களும் பாதிக்கப்படுகின்றன என்று தமது கவலையை வெளியிட்டிருந்தார்.*

*அத்துடன், இந்திய மீனவர்களின் சட்டவிரோத எல்லை தாண்டிய நடவடிக்கைகள் காரணமாகவே இலங்கை கடற்படையினர் அவர்களை விரட்ட வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளாகியுள்ளனர் எனவும் குறிப்பிட்டிருந்தார்.*

*எனவே, மீன்பிடித்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய வெளியுறவு செயலாளரிடம் வடபகுதி மீனவர்களின் மிக நியாயமான ஆதங்கத்தை வெளியிட்டிருந்தார். இதுவிடயத்தில் பல சுற்றுப் பேச்சுககள் இரு தரப்பினராலும் நடத்தப்பட்டுள்ளன. ஆனால், எவ்வித சுமூக முடிவும் எட்டப்படாத நிலையில் வடபகுதி மீனவர்கள் பாதிப்புகளையே தொடர்ந்து எதிர் நோக்கியிருக்கின்றனர்.*

*இந்தியாவுக்கு மேற்கே பாகிஸ்தானுடன் காஷ்மீர் எல்லைப் பிரச்னை காணப்படுகின்றது. கிழக்கே லடாக் மலைப்பிரதேசம் முதல் அருணாசலப் பிரதேசம் வரை இந்தியாவுக்கு சீனாவுடன் எல்லைப் பிரச்னை காணப்படுகின்றது. தெற்கே இந்திய மீனவர்களுக்கும் இலங்கையின் வடபகுதி மீனவர்களுக்கும் இடையிலான எல்லை தாண்டிய பிரச்னை முளையிலேயே கிள்ளி எறியப்பட்டு இந்திய- இலங்கை இராஜதந்திர உறவில்கூட பிராந்திய ரீதியாக சிக்கல்களை ஏற்படுத்தாதிருப்பதை இரு நாடுகளும் உறுதி செய்ய வேண்டியது காலத்தின் தேவையாகின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஒக்ரோபர் - 09 சனிக்கிழமை
பிலவ வருடம் - புரட்டாதி 23

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 09.00 |
| ராகு காலம் | : | 09.00 - 10.30 |
| திதி | : | சதுர்த்தி |




**மேடம்**
நல்ல விஷயம் ஒன்று முடிவாகலாம். உற்சாகம் கூடுதலாகும். சிறு வருமானம் உண்டு. பழைய நண்பர்கள் சந்திப்பு ஏற்படும்.பரபரப்பான நாள். முக்கியமானவர்களை சந்திப்பீர்கள்.

**இடபம்**
அதிர்ஷ்டம் காரணமாக முதலீடு இலாபம் தரும். நம்பிக்கைக்குரிய நண்பர்கள் மூலம் நன்மை ஒன்று ஏற்படும். உழைப்பு அதிகரித்தாலும் உற்சாகம் குறையாது.

**மிதுனம்**
குடும்பப் பிரச்னை ஒன்று முடிவுக்கு வரும். வீட்டிற்கு தேவையான பொருள் ஒன்றை வாங்கி மகிழ்வீர்கள். தாமதப்பட்ட நல்ல விஷயம் ஒன்று தீர்மானிக்கப்படும்.

**கடகம்**
வெளியூர் செல்லும் வாய்ப்பு சிலருக்கு ஏற்படும். தாயின் உடல்நலம் பற்றி இருந்து வந்த கவலை நீங்கும். அக்கம் பக்கத்தினருடன் இருந்து வந்த தகராறு அகலும்.

**சிம்மம்**
அலுவலகத்தில் புதிய திருப்பங்கள் ஏற்படும். சிறு ஆதாயம் உண்டு. விருந்து உண்பீர்கள். எதிர்ப்புகள் பற்றி கவலைப்பட வேண்டாம். வீடு மாற்றம், அலுவலக மாற்றம் ஏற்படக்கூடும்

**கன்னி**
சிறு தடைகளும் தாமதங்களும் நீங்கி நிம்மதி வரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்காத குறை இன்று நீங்கும்.பணியிடத்தில் நீங்கள் விரும்பியபடி பொறுப்பு மாற்றப்படலாம்.

**துலாம்**
முன்னேற்றத்தில் இருந்து வந்த தடைகள் விலகும். தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும். நண்பர்கள் உதவி செய்வர். பெண்கள் குழந்தைகள் நலனில் மிகுந்த அக்கறை கொள்வர்.

**விருட்சிகம்**
பணியாளர்களுக்கு பரிசீலனையில் இருந்த பதவி உயர்வு கிடைக்கலாம். முன்னேற்றம் கூடும். கொடுக்கல், வாங்கல் திருப்தி தரும். கவலை ஒன்று தீரும். வெளிநாட்டிலிருந்து நன்மை வரும்.

**தனுசு**
பல காலமாக மனதில் இருந்த பயம் ஒன்று தீரும். குடும்ப சூழல் திருப்தி தரும். நண்பர்கள் ஒற்றுமை பலப்படும். குடும்பத்தில் மங்கல ஓசை கேட்கும் வாய்ப்பு நெருங்கும்.

**மகரம்**
விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.குடும்பத்தினர் உங்களுக்கு அனுசரணையாக நடந்து கொள்வர். பணிபுரி யும் இடத்தில் இருந்து வந்த கசப்பை நீக்குவீர்கள்.

**கும்பம்**
ஆரோக்கியத் தொல்லை நீங்கும். எதிலும் நிதானப்போக்கு இருக்கும். உறவினரிடம் பகை உருவாகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். தந்தையால் இருந்து வந்த சில பிரச்னைகள் அகலும்.

**மீனம்**
வாகனப் பழுதுகளால் மனதில் ஏற்பட்ட வாட்டம் நீங்கும். மற்றவர்கள் விவகாரத்தில் தலையிட வேண்டாம். அவசரப்பட்டு வாக்குவாதத்தில் ஈடுபடாமல் இருந்தால் இனிய நாளாகும்.

# தமிழக மீனவர்களை பாதுகாப்பதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்

## மத்திய, மாநில அரசுகளிடம் ஜி.கே.வாசன் வலியுறுத்து



சென்னை, ஒக். 09,

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசிடம் தொடர்பு கொண்டு நல்ல தீர்வு ஏற்படுத்த வேண்டும் என முன்னாள் அமைச்சரும் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவருமான ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் மீது இரு தினங்களுக்கு முன்னர் இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்தியது மிகவும் கண்டிக்கத்தக்கது எனவும் தெரிவித்த அவர் மேலும் கூறியதாவது:-

மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதிக்கு வந்த இலங்கை கடற்படையினர் மீனவர்கள் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தி, துரத்தினர். இதனால் பயந்த நிலையில் வேறு பகுதிக்கு மீன்பிடிக்கச் சென்றபோது அங்கும் வந்து மீனவர்களை இலங்கை கடற்படையினர் விரட்டினர். இது இலங்கை கடற்படையினரின் அத்துமீறிய செயலாகும்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க மத்திய அரசு உடனடியாக இலங்கை அரசிடம் தொடர்பு கொண்டு நல்ல தீர்வு ஏற்படுத்த வேண்டும். தமிழக அரசும் மீனவர்களின் மீன்பிடித் தொழிலுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலங்கை கடற்படை அராஜகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் - என அவர் தெரிவித்தார்.

# தடையைமீறி போராட்டம் நடத்தியதால் அண்ணாமலை, வானதிமீது வழக்கு பதிவு

சென்னை, ஒக். 09,

தடையைமீறி போராட்டம் நடத்தியதற்காக தமிழ்நாடு மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மற்றும் வானதி சீனிவாசன் உள்ளிட்டோர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய கிழமைகளில் மத வழிபாட்டுக்கு தமிழ்நாடு அரசு 60 தடை விதித்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், வார இறுதி நாட்களில் கோயில்களில் மக்கள் வழிபட அனுமதி அளிக்கக் கோரியும் நேற்று முன்தினம் பா.ஜ.கவினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமிழ்நாட்டின் முக்கிய 12 கோயில்களின் முன்பு திரண்ட பா.ஜ.கவினர் தடை உத்தரவை நீக்கக் கோரி கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.



“தமிழ்நாடு அரசுக்கு பத்து நாள் அவகாசம் தருகிறோம். அதற்குள் கோயில் திறப்பது குறித்து நல்ல முடிவு எடுக்க வேண்டும். இல்லையென்றால், அரசே ஸ்தம்பிக்கும் அளவிற்கு போராட்டம் நடத்தப்படும்” என்று அண்ணாமலை எச்சரிக்கை விட்டிருந்தார்.

இந்நிலையில், சென்னை காளிகாம்பாள் கோயில் முன்பு போராட்டம் நடத்திய மாநில பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை மீது தொற்று நோய் தடுப்பு சட்டம் மற்றும் தடையை மீறி போராட்டம் நடத்துதல் உள்பட ஐந்து பிரிவுகளின் கீழ் கடற்கரை காவல்துறையினர் வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அதுபோன்று கோவையில் போராட்டம் நடத்திய கோவை தெற்கு தொகுதி பா.ஜ.க. எம்.எல்.ஏ.வானதி சீனிவாசன் மீது பந்தயசாலை பொலிசார் வழக்குப்பதிவு செய்துள்ளனர். மொத்தமாக, போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக 500இற்கும் மேற்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# இந்துக்களின் வழிபாட்டு உரிமையை தி. மு. க. அரசு பறித்து வருகின்றது

## முன்னாள் அமைச்சர் ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு

மதுரை, ஒக். 09,

கோவில்களை மூடி, மக்கள் வழிபடுவதைத் தடை செய்திருப்பதன் மூலம் இந்துகளின் வழிபாட்டு உரிமையை தி.மு.க. அரசு பறித்து வருகிறது என பா.ஜ.க. முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழகம் முழுவதும் வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் கோயில்கள் மூடப்பட்டுள்ளன. பொதுமக்கள் கூட்டம் கூடாமல் தவிர்க்கவும், கொரோனா பரவலை கட்டுப்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது என அரசு கூறியுள்ளது. எனினும்,



இதனை கண்டித்து தமிழக பா.ஜ.க. சார்பில் மாநிலம் முழுவ தும் 12 முக்கிய இடங்களில் கோவில்கள் அருகே நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடந் தது.

இதேபோன்று, கோயில்களில் அனைத்து நாட்களிலும் பக்தர்களை அனுமதிக்க கோரி மதுரை மீனாட்சியம்மன் கோயில் முன் பா.ஜ.க.வினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தலைமையேற்று, தொடங்கி வைத்து முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் பேசும்போது, இந்துகளின் வழிபாட்டு உரிமையை தி.மு.க. அரசு பறித்து வருகிறது. கோயில்களில் வழிபாடு நடத்துவது என்பது ஒவ்வொருவருக்கும் அரசியலமைப்பு சட்டம் வழங்கியுள்ள உரிமையாகும். இந்த உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று கூறி உள்ளார்.





# யாழில் கடற்றொழிலாளர்கள் நேற்று எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

## இந்திய மீனவர்கள் அத்துமீறலை கண்டித்து

யாழ்ப்பாணம், ஒக். 09

**வடக்கு கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்களின் அத்துமீறலைக் கண்டித்து யாழ்ப்பாணம் கடற்தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

**கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் யாழ்ப்பாணம் அலுவலகத்துக்கு முன்பாக நேற்று முற்பகல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.**

கடந்த 5ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்த இந்திய இழுவைப் படகு, குருநகர் பகுதி மீனவர்களின் படகை நேராக மோதிச் சேதப்படுத்தியதோடு படகிலிருந்த குருநகர் மீனவர்கள் மீது தாக்குதல் நடத்த இந்திய மீனவர்கள் முற்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"எமது கடல் வளங்களை அழிக்காதே, இலங்கை அரசே இந்திய இழுவைப் படகுகளைத் தடுத்து நிறுத்து, எமது கடல் எல்லைக்குள் அத்துமீறி வெளிநாட்டு மீனவர்களை அனுமதிக்காதே, இலங்கை அரசே உரிய சட்டங்களை நடைமுறைப்படுத்து, கடல் வளத்தைச் சுரண்டி எமது வாழ்வாதாரத்தை அழிக்காதே" உள்ளிட்ட கோசங்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோரினால் எழுப்பப்பட்டுள்ளன.

போராட்டத்துக்குப் பின்னர் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தின் யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பணிப்பாளரிடம் போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் மனு கையளிக்கப்பட்டது.

கடற்றொழில் அமைச்சர், யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளர் மற்றும் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத்தூதர் ஆகியோருக்கும் மனு கையளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-03)

# புத்தர் சிலை விவகாரம்; 16 பேருக்கு மறியல் நீடிப்பு



கொழும்பு, ஒக். 09

மாவனெல்லையில் புத்தர் சிலை உடைப்பு விவகாரம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 16 சந்தேக நபர்களை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த 16 சந்தேக நபர்களையும் எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

மாவனெல்லை உள்ளிட்ட பிரதேசங்களில் ஒரே இரவில் நான்கு இடங்களில் புத்தர் சிலைகள் உடைக்கப்பட்டு சேதமாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 16 பேர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# பாடசாலை மாணவர்களுக்கு முகக்கவசம் கட்டாயமானது

கொழும்பு, ஒக். 09

பாடசாலை மாணவர்கள் முகக் கவசம் அணிவது கட்டாயப்படுத் தப்பட்டுள்ளதாக பொதுச் சுகாதாரம் தொடர்பான பிரதிப் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் சுசி பெரேரா தெரிவித்தார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகள் தொடர்பாக பெற்றோர்களுக்கு தெளிவூட்டும் வகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மாணவர்கள் வீட்டினுள் இருக்கும் இந்த காலத்தில் அவர்களுக்கு முகக்கவசம் அணிவது, அதனை நீக்குவது மற்றும் அணிந்து கொண்டு இருப்பது போன்ற விடயங்களை பழக்கப்படுத்துவதில் பெற்றோர்கள் நடவடிக்கை எடுப்பது மிகவும் முக்கியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன், கொவிட் தொற்று காரணமாக பாடசாலைகள் மூடப்பட்டு, கடந்த முறை சில வாரங்கள் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் பாடசாலைக்குச் சமூகமளித்த மாணவர்கள் முகக் கவசம் அணிந்துகொண்டிருப்பதை பெரிதும் விரும்பவில்லை. எனவே முகக் கவசம் அணிவதன் முக்கியத்துவம் தொடர்பாக குழந்தைகளுக்கு பெற்றோர்கள் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

# வல்லையில் கொள்ளை கும்பல் அடாவடி; ஒரு மணி நேரத்தில் மூவரிடம் கொள்ளை!

யாழ்ப்பாணம், ஒக். 09

வடமராட்சியின் வல்லை மற்றும் வல்வெட்டித்துறைப் பகுதியில் கொள்ளைக் கும்பல்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளது.

நேற்று முன் தினம் மாலை ஒரு மணி நேரத்தில் காரில் வந்த மூவர் கொண்ட கும்பல் ஒன்று மூவரை அச்சுறுத்திப் பணத்தை அபகரித்துச் சென்றுள்ளது.

இது குறித்த முறைப்பாடுகளை அடுத்து இந்தக் கும்பலை பொலிஸார் தேடி வருகின்றனர்.

வெள்ளை நிறக் கார் ஒன்றில் பயணித்த மூவர் கொண்ட இந்தக் கும்பல் வல்லைப் பகுதியில் வீதியில் பயணித்த முதியவர் ஒருவரை வழிமறித்து கொரோனா தடுப்பூசி போடப்பட்டமை தொடர்பான அட்டையைக் கோரியுள்ளனர். இந்நிலையில் தனது மோட்டார் சைக்கிளை நிறுத்திய அவரிடமிருந்த பணத்தைப் பறித்து தப்பித்துள்ளது.

அதேபோன்று உயவு இயந்திரத்தில் கல் ஏற்றிவந்த ஒருவரை வல்வெட்டித்துறையில் வழிமறித்து பெர்மிட் கோரிய கும்பல் அவரிடமிருந்தும் பணத்தை பறித்துச் சென்றுள்ளது.

ஒரே நாளில் அதுவும் ஒரு மணி நேர இடைவெளியில் நடந்த துணிகர பணப்பறிப்பு தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர்.

குறித்த காரிலிருந்த ஒருவர் அங்வீனமுற்றவர்களின் பயன்பாட்டிலுள்ள கைத்தடியை வைத்திருந்தார் என்றும் தெரிய வந்துள்ளது. (அ-2)

# மாணவருக்கான தடுப்பூசி; புதிய நடைமுறை அறிவிப்பு



கொழும்பு, ஒக். 09

18 மற்றும் 19 வயதுடைய மாணவர்கள் பைசர் தடுப்பூசியை அவர்கள் படிக்கும் பாடசாலையில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான அறிவுறுத்தலை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ வழங்கியுள்ளார் என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார்.

18,19 வயதுப் பிரிவில் உள்ள பாடசாலைக் கல்வியை விட்டுச் சென்றவர்கள் தங்களின் தடுப்பூசிகளைப் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# பண்டோரா ஆவணம் தொடர்பில் அமைச்சர் சி. பி. சொன்ன தகவல்

கொழும்பு, ஒக். 09

பண்டோரா ஆவணம் புலம்பெயர் சமூகங்களின் நோக்கமாக இருக்கலாம் என சுட்டிக் காட்டியுள்ள அமைச்சர் சி.பி.ரத்னாயக்க, இவ் விவகாரம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் எனவும் கூறினார்.

கொத்மலை இறம்பொடை பகுதியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், பண்டோரா ஆவணம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

பண்டோரா ஆவணத்தில் பெயரிடப்பட்டுள்ள இலங்கையர்கள் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஜனாதிபதி குழுவொன்றை அமைத்துள்ளார். அந்த குழுவின் அறிக்கை வெளிவந்த பின்னர் நடவடிக்கை எடுக்கப்படும். எவரையும் பாதுகாக்கவேண்டிய தேவை அரசாங்கத்துக்கு கிடையாது.

பண்டோராவின் நோக்கம் புலம்பெயர் சமூகங்களின் நோக்கமெனில் அதனையும் நாட்டுக்கு




வெளிப்படுத்துவோம்.

பண்டோரா என்ற பெயரை நானும் இன்றுதான் கேள்விப்படுகின்றேன். எனது கையில் வேண்டுமானால் 100 டொலர்கள் இருக்கலாம்.

அதேவேளை, உலகளவில் இரசாயன உரப் பயன்பாடு தவிர்க்கப்பட்டு வருகின்றது. நாமும் அந்த இலக்கை நோக்கி பயணிக்கவேண்டும்- என்றார்.

# பால்மாவின் விலையை அதிகரிக்க பரிந்துரை

கொழும்பு, ஒக். 08

ஒரு கிலோ பால்மா பைக்கெற்றின் விலையை ஆயிரத்து 300 ரூபாயும் 400 கிராம் பால்மா பைக்கெற்றின் விலையை 520 ரூபாயும் அதிகரிக்கவேண்டும் என்று பாவனையாளர்கள் அலுவல்கள் அதிகார சபைக்கு பால்மா இறக்குமதியாளர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.

பால்மா மீதான கட்டுப்பாட்டு விலையை நீக்க அமைச்சரவை தீர்மானித்துள்ள நிலையில் இந்தப் புதிய விலைக்கான பரிந்துரையை இறக்குமதியாளர்கள் முன்வைத்துள்ளனர். (அ)

# மாகாணங்களுக்கு இடையே பயணத்தடை மேலும் நீடிப்பு

கொழும்பு, ஒக். 09

மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை எதிர்வரும் 21ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் நடைமுறையிலிருந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு கடந்த முதலாம் திகதி நீக்கப்பட்டு 15ஆம் திகதிவரை மாகாணங்களுக்கு இடையேயான பயணத்தடை விதிக்கப்பட்டது.

இந்த நிலையில் மாகாணங்களுக்கு இடையேயான பயணத் தடை எதிர்வரும் 21ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

# இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் திருக்குமார் நடேசன் வாக்குமூலம்

கொழும்பு, ஒக். 09

முன்னாள் பிரதியமைச்சர் நிருபமா ராஜபக்ஷவின் கணவரான திருக்குமார் நடேசன், நேற்று சுமார் 3 மணிநேரம் வாக்குமூலம் வழங்கிய பின்னர் இலஞ்ச ஊழல் விசாரணைகள் ஆணைக்குழுவில் இருந்து வெளியேறினார்.

உலகளாவிய ரீதியில் சர்ச்சையை ஏற்படுத்திய, பண்டோரா ஆவணத்தில் திருக்குமார் நடேசன் மற்றும் அவரது மனைவி நிருபமா ராஜபக்ஷ ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இந்நிலையில், குறித்த விவகாரம் தொடர்பில் வாக்குமூலம் அளிப்பதற்காக, இலஞ்ச ஊழல் ஆணைக்குழு வின் அழைப்பின்பேரில் திருக்குமார் நடேசன் அங்கு நேற்றுக் காலை முன்னிலையாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கோரிக்கைகளுக்கு தீர்வின்றேல் நாடு முழுவதும் போரட்டம்தான்!

## யாழ். தாதியர் சங்கம் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், ஒக். 09

அரசிடம் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு தீர்வு கிடைக்காவிட்டால் முழுமையான போராட்டத்தில் குதிப்போம் என அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தின் யாழ். போதனா வைத்தியசாலை கிளைத் தலைவர் தி .பானு மகேந்திரா தெரிவித்தார்.

நாடு முழுவதும் அரச தாதியர் உத்தியோகத்தர் சங்கத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் போராட்டத்துக்கு ஆதரவாக யாழ். போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற கவனவீர்ப்பு போராட்டத்தின்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நாடு தழுவிய ரீதியில் 40க்கும் மேற்பட்ட தொழிற்சங்கள் 7 அம்ச கோரிக்கையை முன்வைத்து நடத்திவரும் தொழிற்சங்க போராட்டத்தின் தொடர்ச்சியாக இன்றும் நாடு தழுவிய ரீதியில் 40ற்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் 7 மணி முதல் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

அரசிடம் ஏற்கெனவே வைத்த 7 அம்சக் கோரிக்கையை விரைவுபடுத்தி தருமாறு கோரிக்கை முன்வைத்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

யாழ். மாவட்டத்திலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை முழுவதும் அனைத்து வைத்தியசாலைகளிலும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எமது கோரிக்கைகளை சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்கம் கவனத்தில் எடுத்து தீர்வு தராத பட்சத்தில் எமது போராட்டமானது மேலும் வலுப்பெற்று தாய்ச் சங்கத்தின் அனுமதியுடன் அனைத்து தொழிற்சங்கங்களையும் இணைத்து முழுமையான போராட்டத்தில் குதிப்போம். எனவே இந்த அரசாங்கம் எமது கோரிக்கைகளுக்குரிய தீர்வை வழங்கவேண்டும்-என்றார்.

(அ-03)



# பருத்தித்துறை வைத்தியசாலையில் சுகாதாரத்துறையினர் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஒக். 09

நாடு தழுவியதாக சுகாதாரத்துறை தொழிற்சங்கள் கூட்டாக இணைந்து பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிலும் சுகாதாரத்துறையினர் கவனவீர்ப்பை முன்னெடுத்தனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சிற்றூழியர், தாதியர்கள் உள்ளிட்ட சுகாதாரத் துறையினர் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொவிட்-19 சிறப்பு கொடுப்பனவை முன்னர் போல் ஒழுங்காக வழங்கு, மேலதிக கொடுப்பனவை அதிகரித்து உரிய காலத்தில் வழங்கு, சீருடை கொடுப்பனவை அதிகரி, ஊழியர்களுக்கு கொவிட்-19 விடுமுறையின் தொடர்ந்து வழங்கு, ஆளணிப் பற்றாக் குறையை நிவர்த்தி செய் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்றுக் காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(அ-02)

# வில்வம்பழ யோக்கட் வியாபார உரிமம் நேற்று உள்ளூர் உற்பத்தி நிறுவனத்திடம் கையளிப்பு





யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ்ப்பாண பல்கலைக்கழக விவசாய பீடத்தினால் உருவாக்கப்பட்ட வில்வம் பழத்தின் குண நலனைக் கொண்ட யோக்கட் பானத்துக்கான உற்பத்தி உரிமம் கையளிக்கும் நிகழ்வு நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல்10 மணியளவில் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

வில்வம் பழ யோக்கட் பானத்தின் கண்டுபிடிப்பாளர் உரிமத்தைக் கொண்டிருக்கும் யாழ். பல்கலைக்கழக விவசாய பீடத்தின் சார்பில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவும், உற்பத்தி உரிமத்தைப் பெற்றுக் கொண்ட முல்லை பால் பொருள் உற்பத்தி நிறுவனத்தின் சார்பில் அதன் நிறுவுநர் சி.தவசீலனும் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டு, ஒப்பந்தத்தைப் பரிமாறிக் கொண்டனர்.

இந்த நிகழ்வின் போது யாழ் பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி கலாநிதி சீ.வசந்தரூபா, பயிரியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளரும், தொழில்நுட்ப பீடத்தின் பீடாதிபதியுமான பேராசிரியர் திருமதி சி. சிவச்சந்திரன், வணிக இணைப்பு அலகின் பணிப்பாளர் கலாநிதி த.ஈஸ்வரமோகன், பல்கலைக்கழக நிதியாளர் கே. சுரேஸ்குமார், முல்லை பால் உற்பத்தி நிறுவன ஆலோசனை சபை உறுப்பினர் பேராசிரியர் எஸ். கணேஷ்ராஜா, யோக்கட் பான கண்டுபிடிப்பாளர் சே.ஆனந்த்குமார் மற்றும் அவரது குழுவினரும் கலந்து கொண்டனர்.

இந்த யோக்கட் பானத்தை இயற்கையான வில்வம் பழப் பாணியில் இருந்து முல்லைத்தீவில் அமைந்துள்ள முல்லை பால் பொருள் உற்பத்தி நிறுவனம் வர்த்தக ரீதியில் தயாரிக்க உள்ளது. இது வயிற்றுப்புண் மற்றும் நீரிழிவு நோயை குறைக்க உதவுவதுடன் புற்றுநோய், கிருமி தாக்கம், மூட்டுவலி மற்றும் பல நோய்களுக்கான தீர்வைக் கொண்டுள்ளது என்றும், இந்தக் கூட்டு முயற்சியானது உள்ளூர் உற்பத்திகளையும், உற்பத்தியாளர்களையும் ஊக்குவிப்பதற்கான ஒரு முன்னெடுப்பாக அமையும் என்றும் குறிப்பிடப்படுகிறது.

(அ-3)



# மன்னாரிலும் தாதியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பு

மன்னார், ஒக். 09

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் தாதியர்கள் மற்றும் பிரதேச வைத்தியசாலை சிற்றூழியர்கள், நேற்று வெள்ளிக்கிழமை காலை பணிப் புறக்கணிப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணி வரை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் தாதியர் சங்கத்தினர் பணிப் புறக்கணிப்பை நேற்று முன்னெடுத்த நிலையில், அதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், மன்னாரில் இந்த பணிப்புறக் கணிப்பு முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தினால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு வருகை தந்த நோயாளர்கள், பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருள் விற்ற பெண் துன்னாலையில் கைது

யாழ்ப்பாணம், ஒக். 09

வடமராட்சி, துன்னாலையில் வீடொன்றில் ஐஸ் போதைப் பொருளை விற்பனை செய்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 50 கிராம் ஐஸ் போதைப்பொருளும் ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளது.

நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் 30 வயது பெண்ணே நேற்று மதியம் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளார். (அ-02)

# 8 இலட்சம் இலங்கையர்களுக்கு வசிக்க வாழ்விடங்கள் இல்லை

## அமைச்சர்களுக்கு வீடுகளை அமைக்கும் அரசு

கொழும்பு, ஒக். 09

**பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்களுக்காக வீட்டு வளாகங்கள் அமைக்கப்படுகின்ற நிலையில், சுமார் எட்டு இலட்சம் இலங்கையருக்கு வசிக்க வாழ்விடங்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளது.**

60 லட்சம் குடும்பங் கள் வசிக்கும் இலங்கையில் 52 லட்சம் குடும்பங்கள் மாத்திரமே ஏதேனும் ஒரு வகையான வீடுகளை வைத்திருப்பதாகவும், சுமார் எட்டு இலட்சம் குடும்பங்கள் கடுமையான வறுமையில் வாழ்வதோடு, வீடு என அழைக்கக்கூடிய பாதுகாப்பான இடமின்றி வாழ்வதாக, மனித நேயத்துக்கான வாழ்விடம் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர் யூ ஹ்வா லீ தெரிவித்துள்ளார்.

இந்த பிரச்னைக்குத் தீர்வு காண்பது அரசின் பொறுப்பு என்றாலும், முன்னைய அரசாங்கங்களுக்குப் பதில் சொல்லும் எண்ணம் இல்லை என நீர் கொழும்பில் இடம்பெற்ற, இணையத்தளம் ஊடான உலக வாழ்விட தின நிகழ்ச்சியில் கலந்துகொண்ட யூ ஹ்வா லீ, வலியுறுத்தினார்.

சுதந்திரம் அடைந்து 72 ஆண்டுகளுக்குப் பின்னரும், இலங்கை இன்னும் வளர்ந்து வரும் நாடாகக் காணப்படுவதாகவும், குறைந்தபட்சம் எந்த அரசாங்கத்தாலும், இந்த நாட்டின் வீட்டுப் பிரச்னையைத் தீர்க்க முடியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் என்ற வகையில், மாதிவெலவில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான 200 வீடுகளை அமைக்க முன்வந்துள்ள நிலையில், யூ ஹ்வா லீ இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் 4ஆம் திகதி உலக வாழ்விட தினத்தையொட்டி, நீர் கொழும்பு மக்கள் ஐக்கிய அமைப்பு, கம்பஹாவில் வீடற்ற மக்கள் எதிர்கொள்ளும் பிரச்னைகளுக்குத் தீர்வு காணக்கோரி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒரு கடிதத்தைக் கையளித்துள்ளது.

"ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு வசதியான வீட்டை வழங்குவது தற்போதைய அரசாங்கத்தின் சௌபாக்கிய நோக்கு கொள்கையின் ஒரு விசேட அம்சமாகும். எங்கள் பிரச்னையை நீங்கள் புரிந்துகொள்வது எளிதாக இருக்கும் நாம் நம்புகின்றோம்," என அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

"நிரந்தர வீடு இல்லாத நாங்கள், சமூகத்தில் ஓரங்கட்டப்பட்டுள்ளோம். எங்கள் பிள்ளைகளைப் பாடசாலையில் சேர்க்கும்போது எங்களுக்கு நிரந்தர முகவரி இல்லாததால் எங்கள் விண்ணப்பங்கள் பெரும்பாலும் நிராகரிக்கப்படுகின்றன. நிரந்தர முகவரி இல்லாததால் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு அரச வழங்கும் மானியங்களை இழக்கின்றோம்"

இந்த வீட்டுப் பிரச்னை 1979 முதல் 40 வருடங்களாக நீடிப்பதாக நீர்கொழும்பு மக்கள் ஐக்கிய அமைப்பின் செயற்பாட்டாளரான சுபத்திரா குமாரி குறிப்பிட்டார்.

"நாங்கள் அனைவரும் குறைந்த வருமானம் உள்ளவர்கள். எனவே, பொருளாதார நெருக்கடி உள்ளது. நாங்கள் வாடகை செலுத்த முடியாததால், பெற்றோர்கள் மற்றும் உறவினர்களின் வீடுகளில் பல குடும்பங்களுடன் வாழ்வது ஒருவருக்கொருவர் தனியுரிமையைப் பாதிக்கிறது"

"3 அல்லது 4 குடும்பங்கள், அதாவது, 10-15 பேர் ஒரே வீட்டில் வசிக்கும்போது, பல மன வேதனைகள், சண்டைகள் மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை இழப்பது உள்ளிட்ட பல பிரச்னைகளைச் சந்திக்க வேண்டியிருக்கிறது," என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வட மாகாணத்தில் போருக்குப் பின்னர் வீடற்ற நிலையில் பலர் வாழ்ந்து வருவதாகக் கிராமிய தொழிலாளர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

"7000ற்கும் மேற்பட்ட குடும்பங்கள் அகதி முகாம்களிலோ அல்லது உறவினர் வீடுகளிலோ அல்லது வாடகை வீடுகளிலோ குடியேற்றப்படுவோம் என்ற நம்பிக்கையில் வாழ்கின்றனர். அவர்களில் சுமார் 800 பேர் இன்னும் அகதி முகாம்களில் வாழ்கின்றனர்.

மயிலிட்டி, காங்கேசன்துறை துறைமுகங்கள் மற்றும் பலாலி விமான நிலைய அபிவிருத்தி அறிவித்து, தமிழ் மக்களுக்குச் சொந்தமான ஏராளமான நிலங்கள் விடுவிக்கப்படவில்லை, அவை இன்னும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன "எனக் கிராமப்புற தொழிலாளர் சங்கத்தின் தலைவர் ஏ.இன்பநாயகம் சுட்டிக்காட்டியுள்ளார்.



# கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம்

கிளிநொச்சி, ஒக். 09

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது. முல்லைத்தீவு இராணுவ தலைமையக கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் பிலபிரிலய தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வைத்தியசாலை பணிப்பாளர் சுகந்தன் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது வைத்தியசாலைக்கான ஒட்சிசன் செறிவூட்டி இயந்திரம் வைத்தியசாலை அதிகாரிகளிடம் இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நன்கொடைக்கு நன்றி தெரிவித்த கிளிநொச்சி வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியர் சுகந்தன் மேலும் குறிப்பிடுகையில்-

தற்பொழுது மாவட்டத்தில் கோவிட் அபாய நிலைமை தணிந்துள்ளது. ஆனாலும் இவ்வாறான உதவிகள் எமக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றன.

இவ்வாறான உதவிகளை வழங்கிய இராணுவத்தினருக்கு நாம் நன்றி சொல்கின்றோம். இதேவேளை இராணுவத்தினரிடம் மற்றுமொரு உதவியையும் எதிர்பாக்க்கின்றோம். எமது வைத்தியசாலையில் நிலவும் குருதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் குருதிக்கொடை வழங்குமாறு படையினரிடம் நான் கோரிக்கை விடுக்கின்றேன்.

அதேவேளை, எமது வைத்தியசாலைக்கான ஒட்சிசன் சிலிண்டர்கள் 150 வரை தேவைப்படுகின்றன. தற்பொழுது 105 சிலிண்டர்களே காணப்படுகின்றன. மேலதிகமாக தேவை உள்ள நிலையில் அதனையும் பெற்றுத்தருவதற்கு எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

# யாழ்.பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோவுக்கு பதவி உயர்வு

யாழ்ப்பாணம், ஒக். 09

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நாட்டில் 225 தலைமை பொலிஸ் பரிசோதகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களாக (ஏ.எஸ்பி) பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

அவர்களில் யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலைய பிரதம பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோவும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

# வவுனியாவில் மீண்டும் 24 பேருக்கு கொரோனா

## ஒருவர் மரணம்

வவுனியா, ஒக். 09

வவுனியாவில் 24 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதுடன், ஒருவர் மரணமடைந்தார் என சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கோவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் தாமாக முன்வந்து பரிசோதனை செய்தவர்களின் பி.சி.ஆர் மற்றும் அன்ரிஜென் பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன் தினம் இரவு வெளியாகின.

அதில் வவுனியா, வவுனியா வடக்கு, செட்டிகுளம், வவுனியா தெற்கு ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியதாக மாவட்டம் முழுவதும் கோவிட் தொற்று பரவல் அடைந்துள்ள நிலையில் 24 பேருக்கு மேலும் கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கோவிட் சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

மேலும், கோவிட் தொற்று காரணமாக வவுனியாவில் நேற்றுமுன்தினம் செட்டிகுளம் முதலியார்குளம் பகுதியைச் சேர்ந்த வயது 63 ஆண் ஒருவர் மரணமடைந்துள்ளார். மரணமடைந்தவரின் சடலத்தை சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி தகனம் செய்வதற்குரிய நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் முன்னெடுத்துள்ளனர்.

நாடு முடக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டு 7 நாட்கள் கடந்த நிலையில் மீண்டும் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே மக்கள் தொடர்ந்தும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர்.

# இராஜாங்க அமைச்சர் பிமல் நிசாந்த கிளிநொச்சி செயலகத்துக்கு விஜயம்



கிளிநொச்சி, ஒக். 09

கிளிநொச்சி மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி இராஜங்க அமைச்சர் பிமல் நிசாந்த டி சில்வா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற சர்வதேச சிறுவர் தின நிகழ்வில் கலந்துகொண்டு பல்வேறு உதவித்திட்டங்களையும் வழங்கினார். நேற்று முற்பகல் 11 மணிக்கு கிளிநொச்சி மாவட்டத் துக்கு விஜயம் செய்து, குறித்த நிகழ்வில் கலந்துகொண்ட அவர், பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான உதவித் திட்டங்களை வழங்கி கௌரவித்தார்.

# ஒக்ரோபர் 11 முதல் யாழ். பல்கலையில் மீண்டும் கொரோனா தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஒக். 09

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கு அமைய, இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் மற்றும் பணியாளர்களுக்கான கோவிட் 19 தடுப்பூசி ஏற்றல் தேசிய செயற்றிட்டத்தின் கீழ் யாழ்.பல்கலைக் கழகத்தில் எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரின் அறிவுறுத்தலுக்கமைய, வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் நெறிப்படுத்தலில் நல்லூர் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் இந்த செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 11 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை தினமும் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 1.00 பல்கலைக் கழக சுகநல நிலையத்தில் தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன.

எந்தவொரு பல்கலைக் கழகத்திலும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களும், பணிபுரிவோரும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும் என்றும், தடுப்பூசி ஏற்ற வரும்போது தேசிய அடையாள அட்டை, பல்கலைக்கழக அடையாள அட்டை ஆகியவற்றைக் கொண்டு வருமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது

# அறுபது ஆண்டுகளை நிறைக்கும் இராமநாதன் நுண்கலை கழகம்

## ஒரு மனிதனின் நிழலாகும் ஓர் உயர் நிறுவனம்

■ கலாநிதி சுகன்யா அரவிந்தன்

இலங்கையில் தமிழர்தம் பாரம்பரியங்களை ஆழ்புலனூன்றி சமூகத்தினை வழிப்படுத்திய மேதகு ஆளுமைகளுள், சேர் பொன். இராமநாதன் சிந்தனைவழி செயலாற்றிய சு. நடேசபிள்ளை அவர்களும் மிகமுக்கியமான இடத்தினைப் பெற்றிருக்கின்றார். இலங்கையிலே பல தளங்களிலே வளர்ச்சிபெற்ற இசைக் கலையின் காத்திரமுணர்ந்து, 'அனைவர்க்கும் கல்வியாக இசை' என்கின்ற முறையிலே பலரின் ஆர்வத்திற்கும், திறமைக்கும், களம் சமைத்துக்கொடுத்த வள்ளல் இவர்.

இவரது அயராமுயற்சியினால் தமது கனவுகளை நனவாக்கிக்கொண்டோர் பலர். இசைக் கலையானது புதிய கட்டமைப்புக்குள் தன்னை இணைத்து, கலை, மகிழ்வு என்பவற்றுக்கப்பால் ஆய்வு, பட்டம், தொழில் இவற்றுக்கூடான சமூக, பொருளாதார, வளர்ச்சிபோன்ற பல பரிமாணங்களை சமூகம் சார்ந்து இசைக்கலை ஏற்படுத்திக்கொடுக்க இவரின் செயல்பாடுகள் வாய்ப்புக்களை வழங்கியது என்பது யாவரும் தெரிந்த உண்மை.

இந்தநிலையிலே, இலங்கையின் மிக முக்கியமான குடிமகனாகத் திகழ்ந்த இவரது இசைப் பணியின் பயனாய் நிமிர்ந்து நிற்கும் இராமநாதன் நுண் கலைக்கழகம், தன்னுடைய சேவைக்காலத்திலே அறுபது ஆண்டுகளை பூர்த்தி செய்திருக்கின்றது என்பது பெருமகிழ்விற்குரிய விடயம் ஆகும்.

சமகாலத்திலே இந்நிறுவனம் இலங்கைத் தமிழ்ச் சமூகத்தினுள் ஒரு காத்திரமான இடத்தினைப்பெற்றிருக்கின்றது. இந்நிறுவனத்தினால் தங்களுடைய இசைசார் ஆவலைப் பூர்த்திசெய்து கொண்டோர் பலர். வாழ்விலே நல்ல அந்தஸ்தைப் பெற்றோர் பலர். இலங்கை அரசின் தொழில்வாய்ப்புக்களைப் பெற்று சமூக, பொருளாதார அந்தஸ்திலே நிமிர்ந்தவர் பலர். இன்று, புலம்பெயர் தேசங்களிலிருந்து தமிழர்தம் பண்பாட்டினைக்காத்து அடுத்த சந்ததிக்குக் கலைகளைக் கையளிப்புச் செய்துகொண்டிருக்கின்ற இசை, நடன ஆசிரியர்களுள் பலர் இராமநாதன் நுண்கலைக்கழகத்திலே வளர்ந்தவர்கள்.

ஆரம்பகாலங்களிலே தனியார் பணிநிறுவனமாகத் தோற்றம்பெற்று, பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஓர் அலகாக உள்வாங்கப்பட்ட இந்நிறுவனம், இன்று ஒரு தனித்துறையாக வளர்ச்சிபெற்று அழகியல் பீடமாக மாற்றம் பெறுவதற்கான முன்னாயத்தங்களை உள்வாங்கி வருகின்றது. காலந்தோறும் தன்னலம் கருதாப் பெருந்தகைகளின் அர்ப்பணிப்புடனான செயல்பாடுகளே இத்தனை வியாபகத்தின் விளைநிலமாக இருந்திருக்கின்றது.

இந்நிலையிலே இந்த அழகியல் நிறுவனம் கடந்துவந்த பாதையினை மீள்நினைவூட்டம் செய்வது சாலப்பொருத் தமாக இருக்கும். இது அவசியமும்கூட.

**1960** ஒக்ரோபர் **09**ஆம் திகதியன்று சேர் பொன் இராமநாதன் அவர்களது மருகர் திரு சு. நடேச பிள்ளையின் மிகச்சிறந்த எண்ணங்களின் கூட்டுருவாக இந் நிறுவனம் அமைப்பாக்கம் பெற்றது. இந்தக் காலத்திலே இலங்கைத் தமிழரின் இசைப்பயில்வு நிலையமாகக் காணப்பட்ட தமிழகத்தின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தரும், சென்னை தமிழ்ச்சங்கக் காப்பாளருள் ஒருவருமாகிய ரி. எம். நாராயணசாமிப்பிள்ளை அவர்களினால் இக் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. அன்றிலிருந்து, இசையார்வம் மிக்க பலருக்கும் இசைப்பயில்வினை முறையாகப் பின்பற்றுவதற்கு ஏற்ற களமாக இந்நிறுவனம் இன்றுவரை இயங்கி வருகின்றது.

நடேசபிள்ளை அவர்களது அயராமுயற்சியின் பயனாக தமிழகத்தின் புகழ்பூத்த பல இசைமேதைகள் இந் நிறுவனத்திலே பணிக்கமர்த்தப்பட்டு, மாணவர்களுக்கு இசைக்கலையினை முறையாகக் கற்பதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. இந்தவகையிலே தமிழகத்தைச் சேர்ந்த சங்கீதகலாநிதி மஹாராஜபுரம் விஸ்வநாத ஐயர் இந்நிறுவனத்தின் முதலாவது அதிபராக நியமிக்கப்பட்டு, இசைப்பணி முறையாக முன்னெடுக்கப்பட்டது. இவரைத் தொடர்ந்து இவருடைய புதல்வர் மஹாராஜபுரம் சந்தானம் இங்கிருந்து இசைப்பணியாற்றியிருக்கின்றார். இந்நேரத்திலே இசைசார்ந்து நான்காண்டுகளைக் கொண்ட முழுநேரக் கற்கைநெறியாக இசைப்பயில் வினை இந்நிறுவனம் அறிமுகம் செய்தது. மாணவர்களின் திறமைகளை நிர்ணயம் செய்வதற்கான பரீட்சகர்கள் தமிழகத்திலிருந்து வந்து பணியாற்றிச் சென்றார்கள் என்பது வரலாறு. இவர்களுடைய தன்னலம் கருதாப் பணி, இங்கு கற்றவர்களை உலகத்தரம் வாய்ந்த கலைஞர்களாக மிளிரவைக்க வழிசமைத்தது.

காலப்போக்கிலே இந்நிறுவனத்தின் பணி, சமூகத்தினரின் முழுமையான ஏற்புடைமைக்குட்பட் டதன் பின்னர் விரிவாக்கமடையத்தொடங்கியது.

இந்நிறுவனத்தின் வளர்ச்சியின் பயனாக **1965**இன் பின் இலங்கைக் கலைஞர்களும் பணிக்கமர்த்தப்பட்டார்கள். இந்த நிலையிலே ஈழத்திலே மறைந்த வயலின் வித்துவான் செல்வி சாந்தநாயகி சுப்பிரமணியம் வயலின் வாத்தியத்திற்குரிய போதனாசிரியராக நியமிக்கப்பட்டார். தமிழகத்திலிருந்து பேராசிரியர் பி.சாம்ப மூர்த்தி, சந்தியாவந்தனம் சீனிவாசராவ் போன்றவர்கள் பரீட்சகர்களாக வரவழைக்கப்பட்டு, பரீட்சைகள் காத்திரமான தரத்தோடு நிகழத்தப்பட்டன. சித்தி பெறுபவர்களுக்கு 'சங்கீதரத்தினம்' விருது வழங்கப்பட்டது.

**1965**இல் நடேசபிள்ளையவர்களின் மறைந்துவிற்குப் பின்னர், இவரது பணியினை அவருடன்கூட இருந்தவர்கள் பொறுப்பேற்று முன்னெடுத்தனர். நடேசபிள்ளை அவர்களுடைய இல்லம் இசைக் கல்லூரியாக மாற்றம் பெற்றது. இனிமையான அமைதியான சூழலிலே மாணவர்கள் இசைபயிலுவதற்கான அமைவிடத்தினை இந்நிறுவனம் சார்ந்தவர்கள் ஏற்பாடு செய்து கொடுத்திருந்தனர்.



**1965**இல் மஹாராஜபுரம் சந்தானம் தமிழகம் சென்றுவிட, இந்நிறுவனத்தின் பொறுப்பினை எஸ். சரவணமுத்து அவர்கள் ஏற்றுக்கொண்டு செயல்பாடுகளை முன்னெடுத்துவந்தார். தொடர்ச்சியாக **1967**இல் தமிழகத்தின் பேராசிரியர் எம். ஏ. கல்யாண கிருஷ்ணபாகவதர், ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர் ஆகியோர் இசைகற்பிப்பதற்காக இங்கு நியமிக்கப் பட்டனர்.

கல்யாணகிருஷ்ணபாகவதர் தலைமையிலே கல்லூரி சிறப்போடு செயற்படத்தொடங்க, கனடாவிலே தற்பொழுது வசிக்கின்ற வயலின் வித்துவான் திருமதி தனதேவி மித்ரதேவா மற்றும் **1968**இல் பண்ணிசை பயிற்றுவதற்காக திரு எஸ். கனகசுந்தரம், திருமதி ரி. பரந்தாமனும் நியமிக்கப்பட்டார்கள். வீணை பயிற்றுவதற்காக வித்துவான் சங்கரஐயர் நியமிக்கப்பட்டார். **1968**இல் மிருதங்கக் கலையினைப் பயிற்றுவதற்காக தமிழகத்தின் சிறந்த மிருதங்க வித்துவானும், ஈழத்திலே சிறந்த ஒரு மிருதங்க கலைப்பாரம்பரியத்தினை ஏற்படுத்தியவருமான சங்கீதபூஷணம் சிரம்பரம் ஏ. எஸ். இராமநாதன் போதனாசிரியராக நியமிக்கப்பட்டார். **1969**இல் சித்தூர் சுப்ரமணியபிள்ளை, சங்கீதபூஷணம் எஸ். சத்தியலிங்கம் போன்றோர் இந்நிறுவனத்தின் பரீட்சகர்களாக கடமையாற்றினாாகள்.

**1970**ஆம் ஆண்டு சங்கீதகலாநிதி சித்தூர் சுப்ரமணிய பிள்ளை இக்கல்லூரியின் முதல்வராக நியமனம் பெற்றார். **1970**ஆம் வருடம் இந்நிறுவனத்தின் பரீட்சகர்களாக மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் திரு. எஸ். இராமநாதனும் இலங்கையைச் சேர்ந்த சங்கீதபூஷணம் என். சண்முகரத்தினம் அவர்களும் கடமையாற்றினார்கள்.

**1971**ஆம் வருடம் சங்கீதவித்துவான் தஞ்சாவூர் ரி. எம். தியாகராஜன், மற்றும் ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர் ஆகியோர் இங்கு பரீட்சகர்களாகப் பணியாற்றியிருக்கின்றார்கள்.

**1973**ஆம் வருடம் சங்கீதம், பண்ணிசை, வீணை, வயலின், மிருதங்கம் ஆகிய துறைகளின் நிறுவனமாக வியாபகம் பெற்றது. இந்நிறுவனத்தின் சமூகத்தேவையினை உணர்ந்து **1974**இல் இலங்கை அரசு இக்கல்லூரியினைப் பொறுப்பேற்றுக்கொண்டது. கல்லூரி நிர்வாகம் மாவட்டக் கல்வித்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டது. இந்நிலையிலே பல இலங்கை வித்துவான்கள் போதனாசிரியர்களாக இந்நிறுவனத்திலே நியமனம் பெற்றனர். மறைந்த வாய்ப்பாட்டுக் கலைஞரான திருமதி சரஸ்வதி பாக்கியராஜா வாய்ப்பாட்டுக்கும், இன்று கனடாவிலே நடனப்பணியாற்றி வரும் நாட்டியமேதை செல்வி சாந்தா பொன்னுத்துரை நடனத்திற்கும், இன்று கொழும்பிலே இசைப்பணியாற்றி வருகின்ற வீணைவித்தகி திருமதி நந்தினி விஜயரட்ணம் வீணை வாத்தியத்திற்கும் போதனாசிரியர்களாக நியமிக்கப்பட்டு, இந்நிறுவனம், 'இராமநாதன் அரசினர் நுண்கலைக் கல்லூரி' என்கின்ற பெயரிலே இயங்கத்தொடங்கியது.

இவர்களோடு இன்று கொழும்பிலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற திருமதி ஜெகதாம்பிகை கிருஷ்ணானந்தசிவம் மற்றும் சங்கீதபூஷணம் ஏ. கே. கருணாகரன், தமிழகத்திலே இன்று வாழ்கின்ற பிரபலமான கர்நாடக இசைப்பாடகி குலபூஷணி கல்யாணராமன், சங்கீதபூஷணம் திரு எஸ். பத்மலிங்கம், கலாநிதி திரு என். வி. எம். நவரத்தினம், இப்போது லண்டன் பாரதிய வித்ய பவனில் சிறப்பான பணியாற்றும் சிவசக்தி சிவநேசன் போன்றோர் இசை பயிற்றுவதற்காகவும், கனடாவிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற வயலின் வித்துவான் தனதேவி மித்ரதேவா, பிரித்தானியாவிலே வாழும் வயலின் வித்துவான் பத்மசிகாமணி, வயலின் வித்துவான் பாக்கியலட்சுமி நடராசா போன்றோர் வயலின் பயிற்றுவதற்காகவும், கலாநிதி எஸ். மகேந்திரன், பிரித்தானியாவிலே வாழ்ந்துகொண்டிருக்கும் என். சோமாஸ்கந்தசர்மா போன்றோர் மிருதங்க இசை பயிற்விப்பதற்காகவும், பிரித்தானியாவிலே வாழ்ந்து கொண்டிருக்கும் திருமதி மாலினி ஸ்ரீனிவாசன், இலங்கையைச் சேர்ந்த நந்தினி விஜயரட்ணம் போன்றோர் வீணை இசை பயிற்றுவிப்பதற்காகவும், இன்று அவுஸ்திரேலியாவிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற திருமதி பத்மரஞ்சினி உமாசங்கர், கலாநிதி கிருஷாந்தி ரவீந்திரா போன்றோர் நடனக் கலையினைப் பயிற்றுவிப்பதற்காகவும் பணியாற்ற நியமிக்கப்பட்டனர். இவர்களோடு பல இலங்கை வித்வான்கள் வருகைதரு போதனாசிரியர்களாகவும், பரீட்சகர்களாகவும் இங்கு பணியாற்றினர்.

சு. நடேசபிள்ளை அவர்களது உயரிய நோக்கும் முயற்சியும் **1974**ஆம் ஆண்டு அந் நிறுவனத்தை உயர் கல்வி அமைச்சு தன்னுள் இணைத்துக்கொண்டு, பல்கலைக்கழக அந்தஸ்தினை இந் நிறுவனத்திற்கு வழங்க முன்வந்தது. பல்கலைக்கழக அந்தஸ்தினைப் பெற்றதன் பின் இந்நிறுவனம் முற்றாக ஈழத்துக் கலைஞர்களால் நிர்வாகம் செய்யப்பட்டதோடல்லாமல், ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் ஈழத்துக் கலைஞர்களே பணியாற்றும் வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டனர்.

இதன் பயனாக 'இராமநாதன் நுண்கலைக்கழகம்' என்கின்ற பெயரால் இந்நிறுவனம் அறிமுகம் செய்யப்பட்டது. இந்நிலையிலே பல்கலைக்கழக கட்டமைப்பிற்கேற்ப கல்விசாரா ஊழியர், தற்காலிகப் பணியாளர்கள் என பலரும் நியமிக்கப்பட்டனர். ஒரு தனி மனித முயற்சியினால் தோற்றம் பெற்ற இந்நிறுவனம், இந்தக் காலத்திலே பல்கலைக்கழக அந்தஸ்தினைப் பெற்று, இலங்கையின் இசைத்துறை மற்றும் நாட்டியத்துறை வளர்ச்சிக்கு பெரும்பணியாற்றத் தொடங்கியது.

ஈழத்து ஆடலாசான் கலைஞர் வேலானந்தனின் முயற்சியின் பயனாக கதகளி ஒரு பாடமாக அறிமுகம் செய்யப்பட்டு, பின்வந்த காலங்களிலே சிலபல காரணங்களினால் அத்துறை கைவிடப்பட்டது.

**1976**இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமஸ்கிருதத் துறைப் பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள் இத்துறையின் தலைவராகப் பணியாற்றினார்.

இவ்வாறாக, யாழ்ப்பாண சமூகத்திற்குப் பணியாற்றிய இந் நிறுவனம், **1991**இல் பேராசிரியர் துரைராஜா துணைவேந்தராயிருந்த காலத்தில் வாய்ப்பாட்டு, வயலின், வீணை, பண்ணிசை, மிருதங்கம், நடனம் என தனித்தனியான அலகுகளாகப் பிரிக்கப்பட்டு, இத் துறைகளுக்கான போதனாசிரியர்களும் நியமிக்கப் பட்டார்கள். **1992**இல் நீண்டகாலமாகப் போதனாசிரியர்களாக சேவையாற்றிவந்தவர்கள் நிரந்தர விரிவுரையாளர்களாகப் பதவியுயர்வு பெற்றனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# பெருந்தொற்றின் சன்னதம்

■ நியூசிலாந்து சிற்சபேசன்




கொரோனாப் பெருந்தொற்று ஆரம்பமாகி இருபதுக்கு மேற்பட்ட மாதங்கள் கடந்துவிட்டன. பறவைக்காய்ச்சல், பன்றிக்காய்ச்சல் போன்றதொரு தொற்றுக்காய்ச்சல் என்பதாகவே ஆரம்பத்தில் கருதப்பட்டது. குறுகியகாலத்தில் தொற்று கட்டுப்படுத்தப்பட்டுவிடும் என்னும் நம்பிக்கையே பரவலாக ஏற்படிருந்தது.

கொரோனாத் தொற்றின் கோர முகம் படிப்படியாக வெளிப்பட்டது. ஐரோப்பாக் கண்டத்திலே நம்பிக் கைகள் அசைக்கப்பட்டன. சூரியன் அஸ்தமிக்காத சாம்ராச்சியத்தின் திணறல் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அத்திலாந்திக்கடலுக்கு அப்பால் கொரோனாவின் உக்கிரதாண்டவம் அச்சத்தை ஏற்படுத்தியது.

பல்வேறு பேரிடர்களை உலகம் எதிர்கொண்டிருக்கின்றது. யுத்தக்களரிகள் ஏற்பட்டிருக்கின்றன. காலத்துக்குக்காலம் பெருந்தொற்றுக்கள் உருவாகியிருக்கின்றன. அண்ணளவாக நூறுஆண்டுகளுக் கொருதடவை பெருந்தொற்றொன்று ஏற்படுவதாகச் சொல்லப்படுகின்றது. 1918லே ஏற்பட்ட ஸ்பானிஷ் காய்ச்சலை அந்தவகையிலே குறிப்பிடலாம்.

இவ்வாறாக, வரலாறெங்கும் பேரிடர்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதனால் பெருந்தொற்றொன்றிலே ஏற்படக்கூடிய அபாயங்களை உலகம் அறிந்திருந்தது. கொரோனாப் பெருந்தொற்று ஆரம்பமாகியபோது, தடுப்பு மற்றும் தற்காப்பு நடவடிக் கைகளைத் துரிதமாக எடுத்திருக்க வேண்டும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை. அதீதமான பொருளாதார வளர்ச்சியினால் ஏற்பட்ட உலகமயமாதலின் சீத்துவத்தை, கொரோனாப் பெருந்தொற்று துகிலுரித்தது. கட்டமைக்கப்பட்டிருந்த பிம்பங்கள் சிதறின. முரண்பாடுகள் முச்சந்தியில் கைகொட்டிச்சிரித்தன.

கொரோனாத் தொற்றைக் கட்டுப் படுத்துவது தொடர்பிலான முயற்சிகளுக்கு இணையாக, அல்லது அதனிலும் வேகமாகவே கொரோனாத் தொற்றின் தோற்றுவாயைத் தேடுவதிலே உலகின் கவனம் குவிக்கப்பட்டது. அத்தகையதோர் இடைவெளியில் கொரோனா எல்லைகளை அகலமாக விரித்துக்கொண்டது.

பொருளாதார வளம்மிக்க தேசங்களே முதலாவது அலையில் அதிகளவில் பாதிக்கப்பட்டன. தொற்றின் உக்கிரம் அக்கினிப் பிளம்பாக பொங்கியெழுந்தது. அதனால் ஏதாவது செய்தாகவேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாகியது. தொற்றை பல்வேறு தேசங்களுக்கும் காவிச்செல்வதிலே, சர்வதேச விமானம் மற்றும் கப்பல் போக்குவரத்தின் பங்கு பீதியை ஏற்படுத்தியது. அதனால் சர்வதேச ஊடாட்டங்களைக் கட்டுப்படுத்தவேண்டிய சூழ்நிலை உருவாகியது.

அத்தகைய சந்தர்ப்பத்திலேகூட, ஒருமித்த செயல்பாடுகளைத் தேடவேண்டியிருந்தது பொருளாதாரம் மட்டுமே பெருமளவில் கவனத்தில் கொள்ளப்பட்டது. குறுகிய பொருளாதார நலன்களையே பல்வேறு தேசங்களும் கவனத்தில் கொண்டன. சர்வதேச எல்லைகள் ஆங்காங்கே மூடப்பட்டன. ஆனால், ஒருமித்த செயற்பாடின்மையால் எல்லைகளைப் பராமரிப்பது சிக்கலாகியது.

கொரோனாப் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்த தேசங்கள் திணறியபோது வாராதுவந்தமாமணியே லொக்டவுன் ஆகும். அதன்பின்னர் லொக்டவுன் (பொதுமுடக்கம்) மந்திரச் சொல்லாகியது. மக்கள் வீடுகளிலே முடங்குவதே, கொரோனாப் பெருந்தொற்றிலிருந்து தப்புவதற்கான உபாயமாகச் சொல்லப்பட்டது. சிலர் வீடுகளிலே முடங்கினார்கள். பலர் திணறினார்கள். அதிலே இரண்டு வகையானோர் இருந்தனர். ஒருவகையினர், வானத்தை எல்லையாக்கி ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் எனத் திளைத்தவர்கள். அவர்களினால் வீடுகளில் முடங்கமுடியவில்லை அதனால் உரத்துக் கத்தினார்கள். சுதந்திரம் வேண்டுமெனப் புலம்பினார்கள். மற்றுமொருவகையினர், அன்றாடம் காய்ச்சிகள். தொழிலுக்குப்போனால் மட்டுமே சாப்பிடமுடியும் என்னும் நிலையைக் கொண்டவர்கள்.

அபிவிருத்தியடைகின்ற நாடுகளிலே லொக்டவுன் ஏற்படுத்திய தாக்கம் அளப்பரியது. பெருநகரங்களிலே கட்டுமானம் போன்ற துறைகளிலே பணியாற்றுகின்ற புலம்பெயர்தொழிலாளர்களின் அவலம் கொடியது. லொக்டவுனில் திக்குமுக்காடினார்கள். வேலையில்லாதபோது சாப்பிடமுடியாது. அதனால் சொந்த ஊருக்குத் திரும்ப விரும்பினார்கள். ஆனால், ரயில் பஸ் எனப் பொதுப் போக்குவரத்து முடக்கப்பட்டிருந்தது. அதனால், பெருநகரங்களிலிருந்து பெருந்தொகையானவர்கள் கால்நடையாகச் சொந்த ஊருக்குப் புறப்பட்டனர். டில்லியிலிருந்து வெளியேறும் சாலைகளில் கால்நடையாகச் சென்ற மக்களின் எண்ணிக்கை இந்தியா- பாகிஸ்தான் பிரிவினையின்போது ஏற்பட்ட இடப்பெயர்வை நினைவுபடுத்தியது.

காலப்போக்கில், கொரோனப் பெருந்தொற்றைக் கையாள்வதற்கு லொக்டவுன் (பொதுமுடக்கம்) பயனற்றதாகியது. அதுவே பரந்துபட்ட உலக நாடுகளின் அனுபவமாகியது. விதிவிலக்காக, அவுஸ்திரேலியாவும் நியூசிலாந்தும் லொக்டவுன் அணுகுமுறை வழியாகச் சமூகப்பரவலை கட்டுப்படுத்தியிருக்கின்றன. ஆனாலும், லொக்டவுன் அணுகுமுறை அங்கேயும் டெல்டா திரிபிடம் தலைகுனிந்திருக்கின்றது.

தொற்றிலிருந்து தப்புவது பூதாகரமான பிரச்சினையாகியபோது தடுப்பூசிக்கான தேடல் ஆரம்பமாகியது. அங்கேயும் ஒன்றுபட்ட செயல்பாடு இடம்பெறவில்லை. கொரோனாத் தொற்றின் மரபணுக் கட்டமைப்பு அடையாளமாகியது. அதன்பின்னர் தடுப்பூசியை கண்டுபிடிப்பதற்கான ஆய்வுகள் மின்னல் வேகத்தில் ஆரம்பமாகின.

**❝ தடுப்பூசி வழங்கலில் காணப்படுகின்ற சமச்சீரின்மையே பெருந்தொற்றின் மற்றுமொரு சவாலாகும். வரையறுக்கப்பட்ட அளவுகளிலேயேனும் தொற்றிலிருந்து தடுப்பூசி பாதுகாக்கின்றது. ஆனால், தடுப்பூசி எல்லோருக்கும் கிடைக்கவில்லை. மறுவளத்தில், சிலர் தடுப்பூசியை நிராகரிக்கின்றனர். அதனால் பெருந்தொற்றுப் பரவல் தடுக்கமுடியாததாகின்றது.**

தடுப்பூசியைக் கண்டறிவதற்காக ஆரம்பமாகிய ஓட்டம், அடுத்தடுத்த கட்டங்களுக்கு வேகமாகத் தாவியது. கண்டறிந்த தடுப்பூசியை உற்பத்தி செய்வதற்கான பந்தயம் ஆரம்பமாகியது. உற்பத்திக்கான மூலப்பொருள் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதற்கான தந்திரங்கள் பிரயோகிக்கப்பட்டன. தடுப்பூசிகளை கைவசப்படுத்துவதற்கான உபாயங்கள் பயன்படுத்தப்பட்டன. குறுந்தேசியவாதம் துளிர்விட்டது. தடுப்பூசியை உற்பத்தி செய்த நாடுகள், விநியோகம் தொடர்பிலான நிபந்தனைகளை விதித்தன.

அதனால் தடுப்பூசியைப் பகிர்ந்துகொள்வதிலே சமச்சீர் இருக்கவில்லை. தடுப்பூசியை சுளையாக வளைத்துப் போட்டிருந்தவர்களிடம் காலப்போக்கில் கொள்வாருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டது. மறுவளத்தில், தடுப்பூசியைக் கொள்வதற்குத் தயாராக காத்திருந்தோருக்கு கொடுப்பார் இருக்கவில்லை. தேசங்களோடு போட்டிபோட்டுக்கொண்டு, தடுப்பூசி அரசியலிலே பெருந்தனவந்தர்களும் களமாடினர்.

எது எப்படியோ, பெருந்தொற்று ஆரம்பமாகி சுமார் இரண்டு வருடங்களை நெருங்குகின்ற வேளையிலேயே, தொற்றுக்கு எதிரான முக்கியமான சக்தியாக தடுப்பூசி வலம்வருகின்றது.

தடுப்பூசி வழங்கலில் காணப்படுகின்ற சமச்சீரின்மையே பெருந்தொற்றின் மற்றுமொரு சவாலாகும். வரையறுக்கப்பட்ட அளவுகளிலேயேனும் தொற்றிலிருந்து தடுப்பூசி பாதுகாக்கின்றது. ஆனால், தடுப்பூசி எல்லோருக்கும் கிடைக்கவில்லை. மறுவளத்தில், சிலர் தடுப்பூசியை நிராகரிக்கின்றனர். அதனால் பெருந்தொற்றுப் பரவல் தடுக்கமுடியாததாகின்றது.

பூமிப்பந்தெங்கிலும் பரந்துபட்ட பாதுகாப்பான நிலை கைவசப்படாதவரையில், தனியொருவருமே பாதுகாப்பாக வாழ முடியாது என்னும் நிலையே ஏற்பட்டிருக்கின்றது. தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையே அழித்திடுவோம் என மீசைக் காரக் கிழவன் அன்றொருகால் முழங்கினான். தனியொருவனுக்கு தடுப்பூசி கிடைக்காவிடில் என்பதே இன்றைய காலத்தின் பேசுபொருளாகியிருக்கின்றது. ஆக, அழிவின் விளிம்புகளை உலகம் பார்க்கவேண்டிய சூழ்நிலையை பெருந்தொற்றின் சன்னதம் ஏற்படுத்தியிருக்கின்றது. ■



# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வினாத்தாள் - I

நேரம் : 1 மணித்தியாலம்


மாதிரி வினாத்தாள் - 01

பகுதி – I நேரம் :- 45 நிமிடம்


1- 40 வரையான வினாக்களில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக

மேலிருந்து பார்க்கப்படும் போது முதலில் தரப்பட்ட உருவைப் போலத் தோன்றும் உரு எது என்பதைத் தெரிவு செய்க.

01.




02.



படத்தில் காட்டப்படும் செயற்பாட்டைச் சரியாகக் குறிப்பிடும் விடையின் கீழ்க் கோடிடுக.

03



1. பூசுதல்
2. அடித்தல்
3. வரைதல்

04.



ஏ1. நனைதல்
2. மிதத்தல்
3. நீந்துதல்

தரப்பட்ட ஐந்து சொற்களில் மூன்றை ஒரு கூட்டமாகவும் இரண்டை வேறொரு கூட்டமாகவும் ஆக்கலாம். அவற்றில் இரண்டு இருக்கும் கூட்டத்திற்கு உரிய சொற்களைத் தெரிவு செய்க.

05. பருப்பு, கடலை, அன்னாசி, பயறு, மாம்பழம்

1. அன்னாசியும், மாம்பழமும்
2. கடலையும், அன்னாசியும்
3. பயறும், பருப்பும்

06. தொலைக்காட்சி, அலுமாரி, வானொலி, பத்திரிகை, மேசை

1. தொலைக்காட்சியும், மேசையும்
2. அலுமாரியும், மேசையும்
3. பத்திரிகையும், அலுமாரியும்

படத்தில் காணப்படுவதை சரியாகக் குறிப்பிடும் வாக்கியத்தின் கீழ்க் கோடிடுக.

07.



1. ஆகாய விமானம் வானில் பறக்கிறது.
2. ஆகாய விமானம் நிலையத்தில் தரையிறங்குகின்றது.
3. ஆகாய விமானம் விமானநிலையத்திலிருந்து புறப்படுகின்றது.

# தீ விபத்தில் ஒரே குடும்பத்தை சேர்ந்த ஐவர் மரணம் ராகலையில் சோகம்; பல கோணங்களில் விசாரணை

நுவரெலியா, ஒக். 09

நுவரெலியா மாவட்டத்தில் ராகலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட - இராகலை முதலாம் பிரிவு தோட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் இடம்பெற்ற தீ விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உயிரிழந்தனர்.

தாய், 11 வயது மகள், ஒரு வயது ஆண் குழந்தை மற்றும் குறித்த பிள்ளைகளின் தாத்தா, பாட்டி ஆகியோரே இவ்வாறு தீயில் உடல் கருகி மரணமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்தவர்கள் ஆர்.ராமையா (வயது 55), அவரின் மனைவியான முத்துலெட்சுமி (வயது 50), இவர்களின் மகள் டிவனியா (வயது 32) மற்றும் குறித்த மகளின் பிள்ளைகள் இருவர் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும், உயிரிழந்த ஆர். ராமையாவின் மகனான ரவீந்திரன் (வயது 30) உயிர்தப்பியுள்ளார். இதேவேளை, சம்பவம் இடம்பெற்றபோது ராமையாவின் மகளின் கணவர் வீட்டில் இருக்கவில்லை எனத் தெரியவந்துள்ளது.

ராகலை, முதலாம் பிரிவு தோட்டத்தில் தற்காலிகமாக அமைக்கப்பட்ட வீடொன்றிலேயே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. பல கோணங்களில் பொலிஸ் விசாரணைகள் தொடர்கின்றன. (இ)






# கென்யாவுக்கு நாமல் விஜயம்

கொழும்பு, ஒக். 09

அமைச்சர் நாமல் ராஜபக்ஷ கென்யாவுக்கு விஜயம் செய்துள்ளார்.

இது குறித்து தனது ருவிட்டர் பக்கத்தில் அவர் பதிவொன்றை இட்டுள்ளார்.

அதில் கென்யாவின் நைரோபிக்கு நேற்றுமுன்தினம் சென்றுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

"இரு நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவை வலுப்படுத்துவது போன்றே மக்கள் சமூகத்தினரிடையிலான நட்புறவை மேலும் வளர்த்துக்கொள்ளும் வகையிலான பயன்மிக்க பல சந்திப்புகளிலும் கலந்துகொள்ள எதிர்பார்க்கின்றேன்" என்றும் அந்தப் பதிவில் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# தடுப்பூசி ஏற்றியமைக்கான டிஜிற்றல் அட்டை விநியோகம்

கொழும்பு, ஒக். 09

முழுமையாகத் தடுப்பூசி ஏற்றிக்கொண்டவர்களுக்கான முன்மொழியப்பட்ட டிஜிற்றல் அட்டையைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளன.

குறித்த அட்டைகளை விநியோகித்தல் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது எனத் துறைசார் இராஜாங்க அமைச்சின் செயலாளர் ஜயந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

அதற்கமைவாக, முழுமையாகத் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொண்ட, வெளிநாடுகளுக்குச் செல்லும் எதிர்பார்ப்பிலுள்ளவர் களுக்காகக் குறித்த டிஜிற்றல் அட்டைகளை விநியோகிக்கும் செயல்பாடுகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் அவர் கூறியுள்ளார்.

உலக சுகாதார ஸ்தாபனத்தால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் குறியீட்டின் அடிப்படையில் தொடர்புடைய டிஜிற்ல் அட்டை வடிவமைக்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவொரு நபரும் போலியான அட்டையைத் தயாரிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்காத வகையில் முழுமையான பாதுகாப்புடன் குறித்த அட்டை தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# 11 பங்காளிகளும் கொழும்பில் மைத்திரி தலைமையில் பேச்சு

## ஜனாதிபதியை சந்திக்கவும் முடிவு



**கொழும்பு, ஒக்.09**

**கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையம் உட்பட தேசிய வளங்களைப் பாதுகாப்பது தொடர்பான முக்கியத்துவமிக்க கலந்துரையாடல் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அரசுக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் பங்கேற்றிருந்தனர். அத்துடன், துறைமுகம், மின்சாரம் மற்றும் எரிபொருள்சார் துறைகளின் தொழிற்சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இதன்போது யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கும் முடிவு பாரதூரமானது எனச் சுட்டிக்காட்டிய தொழிற்சங்கப் பிரமுகர்கள், இதைத் தடுப்பதற்கு பங்காளிக் கட்சிகள் தலையீடு செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

இதையடுத்து இந்த விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்குப் பங்காளிக் கட்சிகள் தீர்மானித்துள்ளன. அத்துடன், தேசிய வளங்களைப் பாதுகாப்பதற்கு முன்னின்று செயல்படுவதாகவும் அறிவித்துள்ளன.

இந்தச் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்ட அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, "தேசிய வளங்கள் என்பது தேசிய பாதுகாப்பின் ஓர் அங்கமாகும். எனவே, அவை விற்பனை செய்யப்படக் கூடாது. இந்த நிலைப்பாட் டிலேயே நாம் உள்ளோம். வேறு நபர்கள் மாறுபட்ட நிலைப்பாட்டில் இருக்கலாம்" - என்றார்.

அதேவேளை, "இது அரசுக்கு எதிரான சந்திப்பு அல்ல. நாட்டைக் கட்டியெழுப்புவது தொடர்பான கலந்துரையாடலாகும்" என்று சந்திப்பின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (இ)

# அமெரிக்காவுடனான ஒப்பந்தத்தை ஒருபோதும் செயல்படுத்தாதீர்கள்!

## திறைசேரியின் செயலாளருக்கு எதிராக தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியம் முறைப்பாடு

கொழும்பு, ஒக். 09

கெரவலப்பிட்டி யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகள் அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ள விவகாரம் தொடர்பில் திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர். ஆட்டிகலவுக்கு எதிராக இலஞ்ச, ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடும்போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியமே மேற்படி முறைப்பாட்டை தாக்கல் செய்துள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மேற்படி ஒன்றியத்தின் இணைப்பாளர் பெங்கமுவ நாலக்க தேரர் கூறியதாவது:-

"அமெரிக்கா தனக்குத் தேவையான பயனையே அந்தத் திட்டத்தின் ஊடாக அடையும். அமெரிக்காவானது ஒருபோதும் ஆசிய நாடுகளுக்குச் சார்பாக செயல்பட்டது கிடையாது. மிகவும் இரகசியமான முறையிலேயே இதற்கான கொடுக்கல் - வாங்கல் இடம்பெற்றுள்ளது. இது ஏன்? மக்கள் பிரதிநிதிகளுக்குக்கூட இது பற்றி தெரியாது.

எனவே, குறித்த உடன்படிக்கையைச் செயல்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம். இது தொடர்பில் உயர் நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுப்பதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம்.



'விற்கப்படவில்லை' என்ற சொற்பதம் ஆளுந்தரப்பால் பயன்படுத்தப்படுகின்றது. விற்றால் என்ன, குத்தகைக்கு வழங்கினால் என்ன அவர்கள் பயன்பெற்றுவிடுவார்கள்" - என்றார். (இ)

# திபெத்தில் பிக்குகளுக்கு சீனாவால் நெருக்கடிகள்

## மாண்டரின் மொழியை பேசுமாறு கட்டாயம்

பீஜிங், ஒக். 09

திபெத் சுயாட்சி பிராந்தியத்தில் சீனா மேலும் இறுக்கமான கட்டுப் பாடுகளை விதிக்க ஆரம்பித்துள் ளது. பாடப் புத்தகங்களை மாண்ட ரினில் மொழி பெயர்க்குமாறு சீன அதிகாரிகள் நெருக்கடி கொடுக் கின்றனர். அத்துடன், பிக்குகள், பிக்குணிகள் மாண்டரினிலேயே பேச வேண்டும் என்றும் வற்புறுத் தியுள்ளனர். கடந்த மாதம் ஹிங் காய் மாகா ணத்தில் சீனா மூன்று நாட்கள் ஆலோசனைக் கூட்டங் களை நடத் தியது. இதன் பின்னரே திபெத்துக்கு இது மாதிரியான நெருக்கடிகளைக் கொடுக்கிறது என்று கூறப்படுகின்றது.

இது குறித்து ப்ரீ ஏசியா வானொலி வெளியிட்ட செய்தி யில், சீனாவின் இந்த நெருக்கடி ஒருவிதத்தில் அதிகார துஷ்பிரயோ கம் என்பதைத் தவிர வேறேதும் இல்லை. திபெத்தில் உள்ள புத்தகங் களை எல்லாம் மாண்டரின் மொழிக்கு மாற்றச் சொல்வது சரி. ஆனால், அதை யார் மொழி



பெயர்ப்பது என்பதுதான் இப்போ தைய கேள்வி. இந்தத் திட்டத்தின் பின்னால் எந்த நல்லெண்ணமும் இருப்பதாகத் தெரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் சீன அதிகாரிகள் இரண்டு திபெத் மாணவர்களை கைது செய்தனர். திபெத் பாட சாலைகளில் இனி சீன மொழியில் மட்டுமே கற்பிக்கப்படும் என்று தெரிவித்தமையை எதிர்த்துப் போராடியதற்காகவே அவர்கள் கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



சமதானத்துக்கான நோபல் பரிசு:

# பத்திரிகையாளர்களான மரியா, டிமிட்ரிக்கு பகிர்வு!

ஒஸ்லோ, ஒக். 09

மரியா ரெஸ்லா மற்றும் டிமிட்ரி முரேடோவ் ஆகி யோருக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப் பட்டுள்ளது.

பிலிப்பைன்ஸை சேர்ந்த மரியா ராப்ளர் ( Rappler) என்ற செய்தி தளத்தை நிறுவியிருந்தார். இதன்மூலம் தனது நாட்டில் வளர்ந்து வரும் சர்வாதிகாரத்தையும், அதிகார துஷ்பிரயோகங்களையும் அம்பலப்படுத்தியிருந்தார்.

டிமிட்ரி முரேடோவ் ரஷ்யாவில் பேச்சு சுதந்திரத்தை கடும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் பாதுகாத்து வந்தார். இவர் நோவஜா ஹசெற்றா (Novaja Gazeta) என்ற பத்திரி கையை நிறுவியதுடன் அதன் பிரதம ஆசிரியராகவும் கடந்த 24 ஆண்டுகள் செயல்பட்டு வருகின்றார்.

நோபல் பரிசு குழு இவர்களை, “ஜனநாயகம், பத்தி ரிகை சுதந்திரம் என்பன பெரும் பாதகமான சூழ்நிலை களை எதிர்கொள்ளும் நிலையில், இந்த இலட்சியங்க ளுக்காகப் போராடும் அனைத்துப் பத்திரிகையாளர் களின் பிரதிநிதிகள். கருத்து சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம் இல்லாமல் தேசங்களுக்கு இடையேயான சகோதரத்துவத்தை வெற்றிகரமாக ஊக்குவிப்பது கடினமாக இருக்கும்.”, என்று குறிப்பிட்டுள்ளது.

பரிசுக்கான இவர்களின் பெயர்கள் நேற்று மாலை நோர்வேயிலுள்ள நோபல் பரிசு வழங்கும் அமைப்பால் அறிவிக்கப்பட்டன. இவர்களுக்கு ஒரு கோடி சுவீடன் குரோனா - நம் நாட்டு மதிப்பில் சுமார் 22 கோடி ரூபாய் பரிசு தொகையாக வழங்கப்படவுள்ளது.

329 போட்டியாளர்களில் இந்த இருவரும் நோபல் பரிசுக்கு தெரிவு செய்யப்பட்டனர். காலநிலை மாற்றத் துக்கு எதிராகப் போராடிவரும் கிரேட்டா துன்பெர்க், எல்லைகள் இல்லாத ஊடக உரிமைகள் குழு, உலக சுகாதார ஸ்தாபனம் ஆகியோர் இந்த ஆண்டு போட்டி யாளர்களாக இடம்பெற்றனர். (ஐ)

# இந்த ஆண்டு இறுதிக்குள் 40வீதத்தினருக்கு தடுப்பூசி!

### உலக சுகாதார ஸ்தாபனம் குறிக்கோள்!

ஜெனிவா, ஒக். 09

2021ஆம் ஆண்டு இறுதிக்குள் ஒவ்வொரு நாட்டி லும் குறைந்தபட்சம் 40 சதவீத மக்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படுவதை இலக்காக வைத்துள் ளோம். 2022 நடுப்பகுதிக்குள் 70 சதவீதமாக எட்டப் படும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித் துள்ளது.

அந்த அமைப்பின் தலைவர் டெட்ராஸ் அதானம் கேப்ரியாசிஸ் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டுக்குள் உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டு மக்களிலும் 70 சதவீதம் பேருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்த இலக்கு வைத்துள்ளம். 2021ஆம் ஆண்டுக்குள் குறைந்தபட்சம் 40 சதவீதம் மக்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும்.

இந்த இலக்கை அடைவதற்கு அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, ஒத்துழைக்க வேண்டும். இந்த இலக்கை அடைவதற்கு குறைந்தபட்சம் 1100 கோடி டோஸ்கள் தேவைப்படும். உலகளவில் மாதத் துக்கு தடுப்பூசி தயாரிப்பு 150 கோடியாக இருக்கிறது. இது உலகின் தேவையை நிறைவு செய்ய போதுமான தாக இருக்கும். உலக மக்களில் மூன்றில் ஒருபகுதி முழுமையாக தடுப்பூசி செலுத்திவிட்டனர்.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் உலகத் தடுப்பூசியில் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே பெற்றுள்ளனர். 5 சதவீதத்துக்கும் குறைவாகவே தடுப்பூசியும் செலுத்தியுள்ளனர். தடுப்பூசி உலக நாடுகளுக்கு கிடைக்க ஜி-20 நாடுகள் உதவி செய்ய வேண்டும் - என்றும் அவர் சொன்னார். (ஐ)



# காஷ்மீரில் பதற்றம்!

### 5 நாட்களில் 7பேர் கொலை

ஸ்ரீநகர், ஒக். 08

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் பாடசாலை ஒன றுக்குள் நுழைந்த பயங்கரவாதிகள் இரு ஆசிரியர்களை சுட்டுக் கொன்றனர். இவர்கள் இருவரும் சீக்கிய, இந்து மதத்தை சேர்ந்தவர்களாவர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஈத்கர் என்ற பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

முன்னதாக கடந்த புதன்கிழமை, வீதியோரத்தில் வியாபாரத்தில் ஈடுபட்டவரும் சுட்டுக் கொல்லப்பட் டார். இவர் மாநில தலைநகர் ஸ்ரீநகரில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேவேளை, கடந்த ஐந்து நாட்களில் 7 பேர் இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாக இடம்பெறும் இந்தக் கொலைக ளால் காஷ்மீர் மக்களிடையே பதற்றம் அதிகரித் துள்ளது. (ஐ)



# அமெரிக்காவின் நீர்மூழ்கி மர்ம பொருளுடன் மோதியது!

### 15 படையினர் காயம்

வாஷிங்டன், ஒக். 09

அமெரிக்காவுக்கு சொந்தமான அணு ஆயுத நீர்மூழ்கி கப்பல் ஒன்று தென் சீன கடலில் ‘அறியப்படாத பொருள்’ ஒன்றின் மீது மோதியது. அமெரிக்கப் படையினர் 15 பேர் காயமடைந்தனர்.

யு. எஸ். எஸ். கனெக்டிகட் என்ற அந்தக் கப்பல் சனிக் கிழமையன்று நீருக்கு அடியில் மர்மப் பொருள்மீது மோதியதாக தெரிவித்த அமெரிக்க அதிகாரிகள், இந்த மோதல் எதனால் நடந்தது என்பது குறித்து இன்னும் தெளிவாகத் தெரியவில்லை என்று கூறினர்.

தாய்வானின் வான் பரப்பில் சீன போர் விமானங்கள் நுழைந்தமையால் அந்தப் பிராந்தியம் பதற்றத்தில் உள் ளது. இந்த நிலையில், நீர்மூழ்கி மர்மப் பொருளுடன் மோதியுள்ளது. தென் சீனக் கடல் சர்வதேச அளவில் சர்ச்சைக்குரிய பகுதிகளில் ஒன்றாக உள்ளது. இந்தக் கடல் பகுதியில் பெரும்பாலான பகுதி தமக்கே உரியது என்று சீனா கூறி வருகிறது.

ஆனால், அப்பிராந்தியத்தில் உள்ள பிலிப்பைன்ஸ். மலேசியா, தாய்வான் வியட்நாம் உள்ளிட்ட நாடுகள் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் சீனாவின் கூற்றை மறுத்து வருகின்றன. இந்த பிரச்னையில் சீனாவை எதிர்க்கும் அமெரிக்கா பிற நாடுகளுக்கு ஆதரவளித்து வருகினறமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடகொரியாவுக்கு மருந்து பொருட்கள்!

சியோல், ஒக். 09

வடகொரியாவுக்கு தேவையான கொரோனா மருந்துப் பொருட்களை கப்பல் வழியாக உலக சுகாதார ஸ்தா பனம் அனுப்பத் தொடங்கியுள்ளது.

இதுகுறித்து சர்வதேச ஊடகங் கள் வெளியிட்ட செய்திகளின் பிரகாரம், “வடகொரியாவுக்கு தேவையான கொரோனா மருந்து பொருட்களை உலக சுகாதார அமைப்பு வழங்கத் தொடங்கியுள் ளது. சீனாவின் தாலியன் துறை முகத்திலிருந்து வடகொரியாவுக்கு மருந்துப் பொருட்களை உலக சுகாதார ஸ்தாபனம் அனுப்பத் தொடங்கியுள்ளது” என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

வடகொரியா தனது நாட்டில் கொரோனா தொற்று பரவல் இல்லை என்று கூறி வருகின்றது. முன்னதாக சீனா அனுப்பிய கொரோனா தடுப்பூசிகளையும் ஏற்க அந்த நாடு மறுத்துவிட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

# கொல்கத்தா இலகு வெற்றி; 'பிளே ஓவ்' வாய்ப்பு பிரகாசம்!



சார்ஜா, ஒக். 09

ராஜஸ்தான் அணியை 86 ஓட்டங்களால் வெற்றி கொண்டது கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணி. இதன் மூலம் பிளே ஓவ் சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை கொல்கத்தா பிரகாசமாக்கியுள்ளது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் இரவு சார்ஜாவில் நடந்த 54ஆவது போட்டியில் இயன் மோர்கன் தலைமையிலான கொல்கத்தா நைற் ரைடர்ஸ் - சஞ்சு சாம்சன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணிகள் மோதின.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான், முதலில் களத்தடுப்பைத் தெரிவ செய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா அற்புதமான துடுப்பாட்டம் மூலமாக நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்களை குவித்தது.

அணி சார்பில் அதிகபடியாக ஷுப்மன் கில் 56 (44 பந்துகள்) ஓட்டங்களையும், வெங்கடேஸ் ஐயர் 38 (35) ஓட்டங்களையும் பெற்றனர்.

172 ஓட்டம் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான், கொல்கத்தாவின் கட்டுக்கோப்பான பந்து வீச்சு மற்றும் அபாரமான களத்தடுப்பில் திக்கு முக்காடியது.

16.1 ஓவர்களுக்கு மாத்திரமே தாக்குப்பிடித்த ராஜஸ்தான், அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 85 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது.

அணி சார்பில் அதிகபடியாக ராகுல் திவாடியா மாத்திரம் 44 (36) ஓட்டங்களையும், சிவம் துபே 18 ஓட்டங்களையும் பெற, ஏனைய வீரர்கள் ஓரிலக்க ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் கொல்கத்தா சார்பில் சிவம் மவி 4 விக்கெட்களையும், லோக்கி பெர்குசன் 3 விக்கெட்களையும், சகீப் அல் ஹசன் மற்றும் வருண் சக்கரவர்த்தி ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

86 ஓட்டங்களால் வெற்றி பெற்ற கொல்கத்தா அணி பிளே - ஓவ் சுற்றுக்குள் நுழைவதற்கான வாய்ப்பினை தக்க வைத்துள்ளது.

எனினும், மும்பை - ஹைதராபாத் அணிகளின் போட்டி முடிவிலேயே இந்த வாய்ப்பு உறுதியாகும். (ஐ)



# ஆஷஷ் தொடரில் ஸ்ரோக்ஸ் பங்கேற்கார்!

லண்டன், ஒக். 09

பென் ஸ்ரோக்ஸ் விரலில் சத்திர சிகிச்சை மேற்கொண்டமையால் ஆஷஷ் தொடரை இழக்க நேரிடும் என்று இங்கிலாந்து கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்து கிரிக்கெட் அணியில் தவிர்க்க முடியாத வீரர்களுள் ஒருவர் பென் ஸ்ரோக்ஸ். கடந்த 2019ஆம் ஆண்டு இங்கிலாந்து அணி முதன் முறையாக உலகக் கோப்பையை வென்றதில் இவரின் பங்கு மிக முக்கியமானது.

ஐ. பி. எல். தொடர் இந்தியாவில் நடந்தபோது - கடந்த ஏப்ரலில் இவர் விரலில் காயமடைந்தார். இதைத் தொடர்ந்து சிகிச்சை செய்தார். இந்த நிலையில் அந்த விரலில் அவர் மீண்டும் சத்திர சிகிச்சை செய்துள்ளார். இதனால், வரும் டிசெம்பரில் அவுஸ்திரேலியாவில் நடக்கவுள்ள ஆஷஷ் போட்டியில் அவர் பங்கேற்பது கடினம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே பென் ஸ்ரோக்ஸ் உலகக் கிண்ணத் தொடரிலிருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ராகுல் அதிரடி ஆட்டம் பஞ்சாப் அசத்தல் வெற்றி!



டுபாய்,ஒக்.09

ராகுலின் அதிரடியான துடுப்பாட்டத்தால் பஞ்சாப் கிங்ஸ் தனது கடைசி போட்டியில் சென்னை அணியை 6 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

ஐ. பி. எல். தொடரில் நேற்று முன்தினம் நடந்த 53ஆவது போட்டியில் கே. எல். ராகுல் தலைமையிலான பஞ்சாப் கிங்ஸ் அணியும், டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் முதலில் பந்துவீச்சை தெரிவு செய்தது. இதனால், முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்கள் இழப்புக்கு 134 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது.

135 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் பஞ்சாப் தொடக்க ஆட்டக்காரர்களாக வழக்கம்போல் கே. எல். ராகுல், மயங்க் அகர்வால் களமிறங்கினர்.

முதல் ஓவரிலேயே இரண்டு பௌண்ட்ரிகள் அடித்து இன்றைய நாள் தனது நாள் என்பதை ராகுல் உறுதி செய்தார். அகர்வால் மறுபுறத்தில் வேடிக்கை பார்க்க ராகுல் பௌண்ட்ரிகளாக அடித்துத் தள்ளினார்.

4 ஓவர்களில் 42 ஓட்டங்கள் எடுத்ததால், 5ஆவது ஓவரில் ஷர்துல் தாகூர் அறிமுகப்படுத்தப்பட்டார். இதற்குப் பலனாக அகர்வால் (12), சர்பிரஸ் கான் (0) ஆகியோர் அந்த ஓவரில் ஆட்டமிழந்தனர்.

இதன்பிறகு, ஷாருக் கானை வேடிக்கை பார்க்க வைத்து மீண்டும் தனது அதிரடியைத் தொடர்ந்தார் ராகுல். அவர் தனது 25-வது பந்தில் அரைசத்தை எட்டினார். ராகுலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டிய ஷாருக் கான் அடித்து ஆட முயற்சித்து 8 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

விக்கெட்கள் விழுந்ததால், அடுத்து களமிறங்கிய எய்டன் மார்கிரம் ராகுலுக்கு ஆதரவாக நிற்க, சிக்ஸர்களை விளாச ஆரம்பித்தார் ராகுல்.

8 ஓவர்களில் பஞ்சாப் வெற்றிக்கு 9 ஓட்டங்களே தேவைப்பட்ட நிலையில், மார்க்கிரம் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஆனால், அதே ஓவரில் பௌண்ட்ரியும், சிக்ஸரும் பறக்கவிட்டு வெற்றியை உறுதி செய்தார் ராகுல்.

13 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 139 ஓட்டங்கள் எடுத்த பஞ்சாப் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் இமாலய வெற்றி பெற்றது.

இறுதிவரை ஆட்டமிழக்காமல் இருந்த ராகுல் 42 பந்துகளில் 8 சிக்ஸர்கள், 7 பௌண்ட்ரிகள் உட்பட மொத்தம் 98 ஓட்டங்களை குவித்தார்.

முன்னதாக துடுப்பெடுத்தாடிய சென்னை அணிக்கு டு பிளசிஸ் 76 ஓட்டங்களைக் குவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# மைதானத்தில் காதலை வெளிப்படுத்திய சாஹர்!

டுபாய், ஒக். 09

சென்னை - பஞ்சாப் அணிகளுக்கு இடையே நடந்த போட்டியின்போது தனது காதலிக்கு மோதிரம் அணிவித்து காதலை வெளிப்படுத்தினார் சென்னை வீரர் தீபக் சாஹர்.

சென்னை அணியின் கடைசி லீக் ஆட்டம் டுபாய் சர்வதேச மைதானத்தில் நேற்றுமுன்தினம் பஞ்சாப் அணியுடன் நடைபெற்றது. இந்தப் போட்டியின்போது, சுவாரசியமான சம்பவம் ஒன்று நடந்தது.

சென்னை அணியின் பந்துவீச்சாளராக தீபக் சாஹர் முழங்காலில் அமர்ந்தவாறு தனது காதலை வெளிப்படுத்தினார். தொடர்ந்து அவருக்கு மோதிரத்தை அணிவித்தார். சாஹரின் காதலை ஏற்ற அவரின் நண்பி, சாஹரை கட்டியணைத்துக் கொண்டார். இது தொடர்பான காணொலிகள் சமூகவலைத்தளங்களில் பிரபலமாகியுள்ளன.

சாஹரின் காதலியின் பெயர் ஜெயா பரத்வாஜ் ஆகும். புதுடில்லியை சேர்ந்த இவர் நிறுவனம் ஒன்றில் பணியாற்றுகிறார். இவரின் சகோதரர் சித்தார்த் பரத்வாஜ் பிக் பாஸ் நிகழ்ச்சியில் (ஹிந்தி) கலந்து கொண்டு பிரபலமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)



# நவ.12 முதல் டிசெ.10 வரை 'பட்ஜெட்' மீது விவாதங்கள்

கொழும்பு, ஒக். 09

2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் தொடர்பான விவாதத்தை எதிர் வரும் நவம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் டிசம்பர் 10ஆம் திகதி வரை நடத்துவதற்குச் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க தெரிவித்தார்.

அதற்கமைய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் 2022 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பை (வரவு - செலவுத் திட்ட உரை) நவம்பர் 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை முன் வைப்பதற்கு இங்கு தீர்மானிக் கப்பட்டது எனவும் பாராளு மன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

அதையடுத்து சனிக்கிழமை உள்ளடங்கலாக நவம்பர் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் நவம் பர் 22ஆம் திகதி திங்கட் கிழமை வரை 7 நாட்களுக்கு இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தை நடத்துவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அதன் பின்னர் நவம்பர் 22ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

அதன் பின்னர் நவம்பர் 23ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முதல் குழுநிலை விவாதம் இடம்பெறவுள்ளதோடு, சனிக்கிழமைகள் உள்ளடங்கலாக டிசம்பர் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை 16 நாட்கள் அவ்விவாதத்தை நடத்த இங்கு தீர்மானிக்கப்பட்டது.

அதையடுத்து டிசம்பர் 10ஆம் திகதி மாலை 5 மணிக்கு மூன்றாம் வாசிப்பு மீதான வாக் கெடுப்பு இடம்பெறவுள்ளது.

வரவு - செலவுத்திட்ட விவாத காலப்பகுதியில் பாரா ளுமன்றம் முற்பகல் 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளதுடன் முற்பகல் 9.30 மணி முதல் முற் பகல் 10 மணிரை 30 நிமிடங்கள் ஐந்து வாய்மொழி மூல விடைக் கான வினாக்களுக்கான நேரம் ஒதுக்கப்படவுள்ளது.

இந்தக் காலப்பகுதியில் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் மற்றும் குழுநிலை விவாதம் முற்பகல் 10 மணி முதல் மாலை 5 மணிவரை இடம்பெறவிருப்பதுடன், பிற் பகல் 12.30 மணி முதல் பிற் பகல் ஒரு மணிவரையான 30 நிமிடங்கள் மதியபோசன இடைவேளைக்காக ஒதுக் கப்பட்டுள்ளது.

அத்துடன், வாக்கெடுப்பு இடம்பெறும் நவம்பர் 22ஆம் திகதி மற்றும் டிசம்பர் 10ஆம் திகதி தவிர்ந்த விவாதம் நடை பெறும் ஏனைய தினங்களில் மாலை 5 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத் தின் போதான பிரேரணை மீதான விவாதமும் இடம் பெற வுள்ளது. (இ)

# அறுபது ஆண்டுகளை நிறைக்கும் இராமநாதன் நுண்கலைக் கழகம்

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

1994,95இலே பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை துணை வேந்தராயிருந்த காலத்திலே இந்நிறுவனம் மேலுமொருபடி உயர்ச்சி பெற்றது. இதுவரைகாலமும் சிறுசிறு அலகுகளாகச் செயற்பட்டு வந்த ஒவ்வொரு துறையும், இசைத்துறை, நடனத்துறை எனத் தனிப்பெரும் துறைகளாக தரம் உயர்த்தப்பட்டது. வாய்ப்பாட்டு, வயலின், வீணை, பண்ணிசை, மிருதங்கம், ஐந்தும் இணைந்து இசைத்துறைஎனவும், நடனம் தனித்த துறையாகவும் அமைப்பாக்கம் பெற்று, பல்கலைக்கழகக் கட்டமைவுகளுக்கேற்ப நிர்வாகம் முன்னெடுக்கப்பட்டது. இதுவரைகாலமும் 'டிப்ளோமா' கற்கைநெறியாக இருந்த துறைகள், பட்டப்படிப்பிற்குரிய துறைக ளாக மாற்றம்பெற்றன. இங்கு இணைந்து கல்வி பயின்று கற்கை நெறியினைப் பூர்த்திசெய்கின்ற மாணவர்களுக்கு ஏனைய துறைக ளுக்கு இணையாகப் 'பட்டதாரிகள்' என்கின்ற தரம் வழங்கப்பட்டது.

இன்றைய துணைவேந்தர் தலைமையிலே நுண்கலைப்பீடம் என் கின்ற தனித்த ஒரு பீடமாக மாற்றம் பெறுவதற்கான மற்றுமொரு பாய்ச்சலுக்காக இந்நிறுவனம் தன்னைத் தயார்ப்படுத்தி வருகின்றது.

ஆக, திரு சு நடேசபிள்ளை அவர்களின் மனதிலே எழுந்த இந்த நல்லெண்ணம், இன்று பல்லாயிரம் பேருக்கு வாழ்வளிக்கும் நிறுவனமாக நிமிர்ந்து நிற்கின்றது. இலங்கை பல்கலைக்கழக மானி யங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற, ஆய்வுகளை முன் னெடுத்துவருகின்ற துறையாக, இலங்கைத் தமிழ்ச்சமூகத்தின் பொரு ளாதாரத் தரத்தினை உயர்த்துகின்ற நிறுவனமாக இது செயலாக்கம் பெற்றுவருகின்றது என்றால், அப்பெருவள்ளலின் தூரநோக்கும், சமூகப்பொறுப்பும்தான் இதன் அடிநாதம் என்பது மிகையில்லை.

இந்நிறுவனம் இன்னும் பலகாலம் சமூகப்பொறுப்புணர்ந்து, தேவையுணர்ந்து செயற்படுதலே இப்பெருவள்ளலுக்கு இந்நிறுவனத் தைச் சார்ந்தோர் செய்யக்கூடிய கைம்மாறாகும்.

எண்ணெய் குதங்களை இந்தியாவுக்கு வழங்கியதுபோல்

# 13ஆவது திருத்த சட்டமும் முழுமையாக அமுலாகுமா?

## சபையில் கிரியெல்ல எம்.பி. கேள்வி



கொழும்பு, ஒக்.09

**“இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிர காரம் திருமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கியது போன்று அரச மைப்பின் 13ஆவது திருத்தச் சட்டமும் முழு மையாக அமுல்படுத்தப்படுமா?”**

- இவ்வாறு எதிர்க்கட்சி களின் பிரதம கொறடாவும் ஐக்கிய மக்கள் சக்தியின் எம். பி.யுமான லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பினார்.

பாராளுமன்றில் இடம் பெற்ற வாய்மூல விடைக்கான வினாவின்போதே வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பிலவி டம் இடையீட்டு கேள்வி யொன்றை எழுப்பியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்த தாவது:-

“இந்திய - இலங்கை ஒப்பந் தத்தின் பிரகாரமே திருகோண மலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு வழங்கியுள்ள தாக வலு சக்தி அமைச்சர் உதய கம்மன்பில இங்கு கூறியுள் ளார். அவ்வாறெனின் இந்திய - இலங்கைக்கிடையிலான ஒப்பந்தத்தின் மூலம் உருவான 13ஆவது திருத்தச் சட்டமும் அவ்வாறே நடைமுறைப்படுத் தப்படுமா?” என்று கேட்டார்.

இதற்குப் பதிலளித்த வலு சக்தி அமைச்சர் உதய கம்மன் பில, “பாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல எனது உரையை ஒழுங்காகச் செவி மடுத்திருக்கவில்லை என்பதை அவரின் வயதை வைத்து நான் உணர்ந்துகொள்கின்றேன். ஏனெனில் அவர் தவறாகவே புரிந்து கொண்டுள்ளார்.

2003ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி ஐக்கிய தேசி யக் கட்சி செய்து கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்த உடன் படிக்கையை பாராளுமன்றிலும் சமர்ப்பித்துள்ளேன். 100 எண் ணெய்க் குதங்களையும் கொடுக் கவில்லை. 15 எண்ணெய்க் குதங்களைத்தான் கொடுத் தோம். 2023இல் அவை மீளக் கிடைத்துவிடும் எனக் கூறியி ருந்தனர். கபீர் ஹாசிம் எம். பிக்கு குறித்த உடன்படிக்கையை சபைக்குச் சமர்ப்பிக்குமாறு சவாலொன்றையும் விடுத் திருந்தேன்” - என்றார்.

இதன்போது மீண்டும் குறுக் கிட்ட லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., “அமைச்சர் உதய கம் மன்பிலவுக்கு எப்போதும் எனது வயதுதான் தெரிகின்றது. ஆனால், அவரின் தலைவர் பிர தமர் மஹிந்த ராஜபக்ஷவை விட நான் இளையவன் என் பதை அவருக்குத் தெரியப் படுத்துகின்றேன்” - என்றார். (இ)

# “தபால் மூல வாக்களிப்பே சிறந்த தீர்வு”

கொழும்பு, ஒக். 09

வடக்கிலிருந்து வெளியேற் றப்பட்டவர்கள் சொந்த மாவட் டத்தில் வாக்களிக்க முடியாத பிரச்னைக்குத் தபால் மூல வாக்களிப்பே சிறந்த தீர்வாக அமையும் என்று தான் நம்புவ தாக சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான தினேஷ் குண வர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற தேருநர்களைப் பதிவு செய்தல் திருத்தச் சட்டமூல விவாதத்தில் பேசிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் எம்.பி.யுமான ரவூப் ஹக்கீம், வடக்கிலிருந்து வெளியேற்றப் பட்ட முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் சொந்த மாவட்டத் தில் வாக்களிக்கும் உரிமை வழங் கப்பட வேண்டும்என்ற கோரிக்கை தொடர்பில் பதில ளிக்கையி லேயே மேற்கண்ட வாறு கூறிய அமைச்சர் தினேஷ் குணவர்த் தன மேலும் தெரிவிக்கையில்,

“யாழ்ப்பாணத்திலிருந்து ஏனைய இனத்தவர்கள் வெளி யேற்றப்பட்டபோது பாராளு மன்ற சபாநாயகராக முஹமட் இருந்தார். அவர் உடனடியா கவே எம்மை அழைத்து இது தொடர்பில் கலந்துரையாடினார். இது நீண்ட காலப் பிரச்னை. தீர்வு காணப்பட வேண்டிய பிரச்னை. என்னைப் பொறுத்த வரையில் வடக்கிலிருந்து வெளி யேற்றப்பட்டவர்கள் சொந்த மாவட்டத்தில் வாக்களிக்க முடி யாத பிரச்னைக்குத் தபால் மூல வாக்களிப்பே சிறந்த தீர்வாக அமையும் என்று நம்புகின்றேன்” - என்றார். (இ)

# இறுதித்தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் நிறுத்தப்படாது!

## ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை




கொழும்பு, ஒக். 09

அதிபர்கள், ஆசிரியர்களின் பிரச்னைகளுக்கு இறுதித் தீர்வு பெற்றுக்கொடுக்கும் வரை போராட்டத்தை நிறுத்தப் போவதில்லை என இலங்கை ஆசியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் நேற்று தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பி லேயே இவ்வாறு கூறினார்.

எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் அதிபர்கள், ஆசிரியர்கள் பிரச்னைக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும் என்றும்அவர் குறிப் பிட்டார்.

தங்களின் போராட்டங்க ளுக்கு தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் பின்வாங்குமாக இருந்தால் பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் மாற்றுத் தீர்மானமொன்று எடுக்க நேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

# வாகன இறக்குமதி தொடர்பில் அரசாங்கத்தின் தீர்மானம் இது

கொழும்பு, ஒக். 09

எதிர்காலத்தில் வாகனங் களை இறக்குமதி செய்ய முடிவு செய்யும்போது மின்சாரக் கார் களை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை வழங்க அரசாங் கம் தீர்மானித்துள்ளது.

நாட்டில் காற்று மாசடைத லைக் குறைப்பதற்காக இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சுகா தார அமைச்சர் மஹிந்த அமர வீர தெரிவித்தார்.

காலநிலை மாற்றத்துக்கான தீர்வுகளை வழங்கும் பசுமைப் பொருளாதாரம் குறித்த ஜனா திபதி செயலணியின் இரா ஜாங்க அமைச்சரவை உபகுழு வில் அமைச்சர் உரையாற்றி னார்.

தற்போது ஒரு முறை சார்ஜ் செய்த வாகனமொன்று பய ணிக்கக்கூடிய ஆகக்கூடிய தூரம் 300-350 கிலோமீற்றர் ஆகும்.

பல்வேறு இடங்களில் சுமார் 400இற்கும் அதிகமான மின் னேற்றும் நிலையங்கள் உள்ள தெனவும், அந்த எண்ணிக் கையை மேலும் அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## மார்ச் மாதத்துக்கு...

இந்திய வெளிவிவகார செயலர் ஜனாதிபதி, பிரதமர், நிதியமைச்சர் பஸில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் அரசியல் கட்சிகளை தனித்தனியே சந்தித்து பேசினார். இந்தப் பேச்சுகளின் போது 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பிலும் அதனுடன் தொடர்புடைய மாகாண சபை தேர்தல் தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே மாகாண சபை தேர்தல் தொடர்பான அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது

தேர்தல் முறைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு கூட்டம் நேற்று பாராளுமன்றில் நடைபெற்றது. இதன்போது, தெரிவுக்குழுவில் புதிதாக சேர்க்கப்பட்ட நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் ஆகியோர் முதன்முறையாக பங்கேற்றிருந்தனர்.

அங்கு கருத்து வெளியிட்ட நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ, மாகாண சபைகளுக்கான தேர்தலை உடனடியாக - எதிர்வரும் மார்ச் மாதத்துக்கு முன்பாக நடத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதற்காக மாகாண சபை தேர்தல்கள் சட்டங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டிய தேவை உள்ளது. இந்த விடயத்தில் சில சமயங்களில் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு தேவைப்படலாம் - என்றார்.

அந்தச் சமயம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், “அத்தகைய சட்டம் ஒன்றை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பங்கு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கட்டாயம் அல்ல. இது தொடர்பில் நான் ஒரு தனிநபர் சட்டமூலம் ஒன்றை சமர்ப்பித்திருக்கின்றேன். கால விரயத்தைத் தடுப்பதற்காக அதையே தேவையான மாற்றங்களோடு சமர்ப்பித்து நிறைவேற்றலாம். மேலும், இந்த சட்டமூலத்துக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஐக்கிய மக்கள் சக்தி, ஜே.வி.பி என அனைத்துக் கட்சிகளும் ஆதரவளிப்பதால் முழு பாராளுமன்றின் ஆதரவோடு சட்டத்தை நிறைவேற்றலாம் - என்று கூறினார்.

சுமந்திரன் எம். பியின் கருத்தை சட்டமா அதிபரின் பிரதிநிதி, அனைத்து உறுப்பினர்களும் ஏற்றுக் கொண்டனர்.

மேலும், பழைய சட்டம் நடைமுறைக்கு வைந்த பின்னர் பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் சட்ட ஏற்பாடுகளை புதிய சட்டம் மூலமாக சமர்ப்பித்து வழங்கவும் முடிவு செய்யப்பட்டது. (ஐ)

## “விகிதாசார...

பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழுவில் பரிந்துரைத்தது.

விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் ஊடாக பொது மக்களின் நியாயமான பிரதிநித்துவத்தை உறுதிப்படுத்த முடியும் என்றும், இந்த முறையின் கீழ் சகல வாக்குகளுக்கும் மதிப்பை வழங்க முடியும் என்றும் அக்கட்சி தெரிவித்தது.

பாராளுமன்ற விசேட குழு சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தலைமையில்பாராளுமன்றத்தில் கூடியது. புதிய திருத்தத்தின் ஊடாக ஸ்திரமான அரசாங்கமொன்று உருவாக்கப்படுவதும் மற்றும்ஜனநாயகம் நிலைநாட்டப்படுவதும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என அக்கட்சி வலியுறுத்தியது.

நாட்டில் உள்ள சகல பூகோள எல்லைகளையும் அடிப்படையாகக் கொண்ட பிரதிநிதித்துவம்புதிய திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும். விருப்பு வாக்கு முறையின் ஊடாக தமக்குத்தேவையான மக்கள் பிரதிநிதிகளை வாக்காளர்களால் தெரிவுசெய்ய முடியும். வாக்குச் சீட்டுக்கள் மக்களால் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட வேண்டும் என்றும் முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் சுட்டிக்காட்டியது.

தேர்தல் முறையின் ஸ்திரத்தன்மை அவசியமானது என்றும், இது வாக்காளர்களின் கோணத்திலிருந்து பார்க்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை மாற்றியமைக்காது அதில் காணப்படும்குறைபாடுகளைத் தவிர்ப்பதற்குப் புதிய திருத்தங்களின் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தமது நிலைப்பாடு எனப் பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் கருத்துத் தெரிவித்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி குறிப்பிட்டது.

பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் பரிந்துரைகளை முன்வைத்த மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி) குறிப்பிடுகையில், விகிசாதாரப் பிரதிநிதித்துவமே நாட்டுக்குப் பொருத்தமானது எனத் தெரிவித்தது. விகிதாசாரப் பிரதிநிதித்துவத்தின் கோட்பாடுகள் மாற்றப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படுமாயின் நிறைவேற்று ஜனாதிபதி முறையிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் பாராளுமன்ற விசேட குழு முன்னிலையில் தெரிவித்தார்.

பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை பாராளுமன்ற உப்பினர் கலாநிதி ஹரினி அமரசூரியவலியுறுத்தினார். தேசியப் பட்டியலில் 50சதவீதம் பெண்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் எனவும் அவர் பாராளுமன்ற விசேட குழுவில் சுட்டிக்காட்டினார்.

தீர்மானம் எடுக்கும் மட்டத்தில் சகல சந்தர்ப்பத்திலும் பெண்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்றும், அரசியல் கலாசாரத்தில் உள்ள வேறுபாடு காரணமாக அரசியலில் பெண்களின் பங்களிப்புக் குறைவடைந்துள்ளது என்றும் அவர் குழுவில் தெரிவித்தார். இக்கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால.டி.சில்வா, எம்.யு.எம்.அலி சப்ரி ஆகியோரும்,பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், ரஞ்சித் மத்தும பண்டார, மனோ கணேசன், எம்.ஏ.சுமந்திரன், மதுர விதானகே, சாகர காரியவசம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## புலிகளின்...

குமரன் பத்தமநாதன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ” இறுதிப் போருக்கு பிறகு புலிகளின் சொத்துகள் உங்கள் வசமானது என தகவல்கள் வெளியாகின. அந்த சொத்துகளுக்கு என்ன நடந்தது” என எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே கே.பி. மேற்கண்டவாறு கூறினார்.

“இறுதிப்போரின்போது நான் மலேசியாவில் தலைமறைவாகியிருந்தேன். எனக்கு எந்தவொரு சொத்தும் வழங்கப்படவில்லை. நாளாந்த செலவுக்கே பணம் வழங்கப்பட்டது. அவ்வாறு சொத்துகள் இருந்திருந்தால் எமது மக்களை அழிவில் இருந்து மீட்டிருக்கலாம்.

அவர்கள் (புலிகள்) எவ்வாறான சொத்துகளை விட்டுச்சென்றனர் என்பது எவருக்கும் தெரியாது. எனவே, இப்பிரச்னைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்-என்றார்.

## இரசாயன...

சுமார் 50 பாராளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

விவசாய நடவடிக்கைகளுக்காக இரசாயன உர இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்டதன் காரணமாக, நாட்டுக்குத் தேவையான சேதனப்பசளைகள் இன்றி விவசாயிகள் கடுமையான நெருக்கடியை எதிர்கொள்வதாகவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஜனாதிபதியின் பிரத்தியேக செயலாளரினால் வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைவாக, குறித்த கடிதத்தை ஜனாதிபதிக்கு வழங்கும் நடவடிக்கை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

## வடக்கு-கிழக்கை...

செல்ல வருமானம் அதிகமாக இருக்க வேண்டும். செலவு குறைவாக இருக்க வேண்டும். சாதாரணமாகக் கூறுவது என்றால் நாட்டில் பணம் இருக்க வேண்டும்.

உலகில் ஸ்ரீவ் ஜொப்ஸ்,பில் கேட்ஸ், ஜெக் மார்க் போன்ற கோடீஸ்வரர்கள் தமது திறமையால், உழைப்பால் முன்னேறி வந்தவர்கள் என்பதை நாம் அறிவோம். ஆனால், எமது நாட்டில் கோடீஸ்வரர்கள் அதிகளவில் உள்ளனர்.

திருட்டுகளின் ஊடாக கோடீஸ்வரர்கள் ஆனவர்கள் உள்ளனர். அவர்களின் திருட்டுகளுக்கு உதவி செய்த அரசியல்வாதிகள் உள்ளனர். திறமையால் முன்னேறியவர்களும் இருக்கின்றனர்.

எனினும், அரசியல்வாதிகள் உதவியுடன் பணம் சம்பாதித்தவர்களே அதிகளவானவர்கள் உள்ளனர். அண்மைய காலங்களை எடுத்துக்கொண்டால் ஒரு வருடத்துக்குள் பல நூறு கோடிகளில் ல் இலாபம் பெற்ற தனியார் நிறுவனங்கள் உள்ளன. அவர்களுக்கு அவ்வாறு முடியும் என்றால், அரசுக்கு வருமானம் குறைவடைந்தமை குறித்து அரசாங்கம் தேடியறிய வேண்டும்.

அரசு வழங்கிய வரி சலுகைகள் காரணமாக பொதுமக்களை விட நிறுவனங்களே அதிகளவில் நன்மை பெற்றன. இன்று சிமெந்து, பால்மா, எரிவாயு உள்ளிட்டவற்றுக்கான கட்டுப்பாட்டு விலைகள் நீக்கப்பட்டுள்ளன. சீனி மோசடி, வெள்ளைப்பூடு மோசடி என்று மோசடிகளை அடுக்கிக்கொண்டே செல்லாம்.

நான் விமர்சிக்கவில்லை. வரிச்சலுகை வழங்கப்படுவதால் சாதாரண மக்கள் மீதே தாக்கம் செலுத்துகின்றது. பெரும் நிறுவனங்கள் பாதிக்கப்படுவதில்லை. எனவேதான், பொதுமக்களுக்கு நன்மை பெற்றுக்கொடுக்கும் வகையிலான வரிச்சலுகை முறையை அறிமுகப்படுத்துமாறு நாங்கள் தொடர்ச்சியாக கூறி வருகின்றோம்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களுக்கு மாதாந்தம் 6 ஆயிரம் ரூபாய் வழங்க 2019 ஏப்ரல் பட்ஜெட்டில் முன்மொழியப்பட்டது. இன்றுவரை 153 குடும்பங்களுக்கு மாத்திரம் அந்த கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

அந்த கொடுப்பனவும் 2019 டிசெம்பர் 31ஆம் திகதிக்கு பிறகு வழங்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் என்ன நடந்தது என்பதை கண்டறிய வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு.

எனினும், அதனை செய்யும் வரை அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும். அதற்காக மரண சான்றிதழ் வழங்குவதை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

எனவே காணாமல்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை கண்டறியும் வரை இந்த தொகை அந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

வடக்கு - கிழக்கில் உள்ள வளங்களை வைத்துக்கொண்டு அந்த பகுதிகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாக நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தக் கூடிய வழிமுறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பான எம்மிடம் உள்ளது. நாங்கள் நிதியமைச்சருடன் வடக்கு - கிழக்கு அபிவிருத்தி வேலைத்திடங்களில் இணைந்து செயல்பட தயாராக உள்ளோம். எம்மிடம் சிறந்த முன்மோழிவுகள் உள்ளன. மாவட்ட ரீதியில் சில முன்மொழிவுகளை கூட எம்மால் வழங்க முடியாது உள்ளது. எனவே எமது திட்டங்களை முன்மொழிய எமக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தாருங்கள்- என்றார்.

## பொது மக்கள்...

கூரிய கத்தியை கொடுத்தது போன்றே உள்ளது எனவும் கூறினார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அரசாங்கத்தின் நிதி நிலைமைகள் தொடர்பில் கடந்த காலங்களில் பல்வேறு கருத்துக்கள் நிலவின. இதன்போது தங்களிடம் போதுமான நிதி இருப்பதாக அரசாங்கத்தின் அமைச்சர்கள் கூறியதுடன், சௌபாக்கிய நோக்கு உறுதிமொழிகளை நிறைவேற்றுவோம் என்று கூறினர். அந்த உறுதிமொழிகள் நிறைவேற்றப்படுவதை நாங்கள் வரவேற்கின்றோம். ஆனால் அவை வெறும் பேச்சாக மட்டுமே உள்ளன.

இப்போது இது வங்குரோத்து நாடாக மாறியுள்ளது. மக்களை பிச்சைக்காரர்கள் போன்றே அரசாங்கம் நினைத்துக்கொண்டிருக்கின்றது. மாதத்திற்கு 2000 ரூபாயையே வழங்குகிறது. அதனை பெற்றுக்கொள்வதற்கு மக்கள் வரிசையில் நிற்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இது மிகவும் கவலையான விடயமே.

இதேவேளை தற்போதைய நாட்களில் பயங்காவாதம் தொடர்பில் மீண்டும் பேசு கின்றனர். மக்களை அச்சுறுத்தவும், அரசியல் அதிகாரங்களை தக்க வைத்துக்கொள்ளவும் கூறுகின்றனர்.

நான் சிறந்த சிங்கள, பௌத்தனே. ஞானசார தேரர் ஊடகங்களுக்கு முன்னால் பயங்கரவாதம் தொடர்பில் பேசுகின்றார். அவரிடம் நான் தர்கா நகரில் பிரச்னையை ஏற்படுத்தியதை போன்று மீண்டும் அதுபோன்ற விடயங்களை கொண்டு வந்து நாட்டில் அச்ச நிலைமையை ஏற்படுத்தி, நாட்டை அழிக்க வேண்டாம் என்று வணங்கிக் கேட்கின்றேன்.

இதேவேளை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பைத்தியக் காரர் போன்று கதைக்கின்றார். உங்களுக்கு இவரை விடவும் சிறந்தவரை தேட முடியாதா? குறைந்தது அதனை தயாசிறி ஜயசேகர போன்றோருக்கு கொடுங்கள். தற்போதைய அமைச்சர் ஞானசாரவின் வழியிலேயே போகின்றார். இது குரங்கின் கையில் கூரிய கத்தியை கொடுத்தது போன்றே உள்ளது.

## கொரோனா...

இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா மரணங்களின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 267 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உறுதிப்படுத்தப்பட்ட 38 மரணங்களில் 20 ஆண்களும், 18 பெண்களும் உள்ளடங்குகின்றனர் என்று அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் 5 ஆண்கள், 7 பெண்கள் என 12 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 26 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 15 ஆண்களும், 11 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## 746 தொற்றாளர்கள்...

மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 24 ஆயிரத்து 937 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 421 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 79 ஆயிரத்து 182 ஆக உயர்வடைந்துள்ளது.

## 56 கர்ப்பவதி...

அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டில் சுமார் 8,500 கர்ப்பவதிகள் கோவிட் -19 தொற்றால் பாதிக்கப்பட்டனர். கடந்த வாரங்களில் கர்ப்பவதிகளிடையே பெண்களிடையே தொற்று பரவுவது குறைந்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## பால்மா விலை...

16 பால் மா கொள்கலன்கள் விடுவிக்கப்படுகின்றன. இவை எதிர்வரும் புதன் கிழமை சந்தைகளுக்கு விநியோகிக்கப்படும்.

எனினும், ஒரு கிலோ பால்மாவை 250 - 300 ரூபாய் வரை அதிகரிக்க பரிசீலிக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

(மற்றொரு செய்தி பக்கம் 5இல்)

ஈழநாடு
Eelanadu

# யானையின் கஜமுத்துக்களுடன் வவுனியாவில் மூவர் கைது!



வவுனியா, ஒக். 09

வவுனியாவில் யானைத் தந்த கஜமுத்துக்கள் நான்குடன் மூவர் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியாவில் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப் படையினர் குறித்த வீதியில் பயணித்த சந்தேகத்துக்கிடமானவர்களைச் சோதனை செய்தபோது அவர்களிடம் யானைத் தந்த கஜமுத்துக்கள் நான்கு மீட்கப்பட்டன.

இதையடுத்து, குறித்த யானைத் தந்த கஜமுத்துக்களை உடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் மூவர் விசேட அதிரடிப் படையினரால் கைதுசெய்யப்பட்டனர்.

20, 50, 51 வயதுகளையுடையவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் லியனகமக, மகாவ, நிக்கரவெட்டிய ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

கைதுசெய்யப்பட்டவர்கள், அவர்களிடம் மீட்கப்பட்ட கஜமுத்துக்களுடன் வவுனியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். மேலதிக விசாரணையின் பின் அவர்களை நீதிமன்றில் ஒப்படைக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (இ)

# சிங்கள - கிறிஸ்தவ பிரச்னையை ஏற்படுத்த ஞானசார தேரர் முயற்சி!

## சபையில் காவிந்த ஜெயவர்த்தன எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஒக். 09

**“நாட்டில் கடந்த காலங்களில் சிங்கள - தமிழ் பிரச்னையை ஏற்படுத்தினார்கள், சிங்கள - முஸ்லிம் பிரச்சினையை ஏற்படுத்தினார்கள். தற்போது சிங்கள - கிறிஸ்தவ பிரச்னையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இதன் ஒரு கட்டமாகவே மன்னார் மடுத் தேவாலயத்துக்கு உரித்தான சொத்துக்களைப் பலாத்காரமாகக் கைப்பற்ற ஞானசார தேரர் சட்டத்தை கையில் எடுத்துக் கொண்டு செயற்படுகின்றார்.”**

**- இவ்வாறு குற்றஞ்சாட்டினார் ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி. காவிந்த ஜெயவர்த்தன.**

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை சமகால பொருளாதார நெருக்கடிகள் தொடர்பில் ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்கவால் முன்வைக்கப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவிக்கையில்,

“நாடு பாரிய பொருளாதார பிரச்னையை எதிர்கொண்டுள்ளது. அதற்கு முகம்கொடுப்பதற்கு அரசிடம் எந்த வேலைத்திட்டமும் இல்லை. மக்கள் அத்தியாவசிய பொருட்களுக்கு வரிசையில் நிற்கின்றனர். அத்தியாவசிய பொருட்களை இறக்குதி செய்வதற்கு டொலர் இல்லை. பால்மா, எரிவாயு, சீனி கொள்வனவு செய்துகொள்ள மக்களை வீதியில் நீண்ட நேரம் நிற்கவைத்திருப்பது குறித்து நாடு என்றவகையில் நாங்கள் வெட்கப்படவேண்டும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ள இந்த அரசால் இன்று அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்யும் நிறுவனங்களை நிர்வகிக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. இன்று பொருட்களின் விலையைத் தீர்மானிப்பது நிறுவனங்களே. அரசு வெட்கப்படவேண்டும். 18.3 வீத மந்தபோஷணை உள்ள சிறுவர்கள் இருக்கும் நாட்டில், அந்தப் பிள்ளைகளுக்கு பால் மாவைக்கூட வழங்க முடியாமல் உள்ளது.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்களுக்கு நீதி கோரும்போது, அந்த மக்களை விசாரணைக்கு அழைத்துச் செல்கின்றனர். அதே போன்று ஞானசார தேரர் மன்னார் மடுத் தேவாலயத்துக்குச் சென்று மீண்டும் பிரச்னையை ஏற்படுத்த முயற்சிக்கின்றார். மடுத் தேவாலயத்தின் காணிகளை பலாத்காரமாக பெற்றுக்கொள்ள முற்படுகின்றார்.

நாட்டில் கடந்த காலங்களில் சிங்கள - தமிழ் பிரச்னையை ஏற்படுத்தினார்கள், சிங்கள - முஸ்லிம் பிரச்னையை ஏற்படுத்தினார்கள். தற்போது சிங்கள - கிறிஸ்தவ பிரச்னையை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர். இதற்கு அரசு இடமளிக்கக்கூடாது.

மடுத் தேவாலயத்துக்குச் சொந்தமான சொத்துக்களை பலாத்காரமாகக் கைப்பற்றிக்கொள்ள ஞானசார தேரர் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செயற்படுகின்றார். எனவே, உடனடியாக அவருக்கு எதிராக அரசு, நடவடிக்கை எடுக்க வேண்டும்” - என்றார். (இ)




# மரண அறிவித்தல்



## திருமதி தவமணி அமிர்தப்பிள்ளை

**பிறப்பு**
**05.10.1937**

**இறப்பு**
**06.10.2021**

குப்பிளானைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து Den Helder ஐ தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட தவமணி அமிர்தப்பிள்ளை அவர்கள் கடந்த (06.10.2021) புதன்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவகுரு – தேவ யானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மூத்ததம்பி – தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமிர்தப்பிள்ளை (இ.போ.ச – சாரதி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் பஞ்சலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அமிர்தமணி (இலங்கை), காலஞ்சென்ற அமிர்தவதனி, அமுதராசவதனி (நெதர்லாந்து), தவலிங்கம் (டென்மார்க்), அமிர்தரூபிணி (கனடா), தவக்குமார் (சுவிஸ்), அமிர்தகௌரி (சுவிஸ்), அமிர்தராணி(கனடா) ஆகியோரின் அருமைத் தாயாரும்,மருமக்களின் பாசமிகு மாமியாரும், பேரப்பிள்ளைகளின் பாசமிகு பேத்தியும், பூட்டப்பிள்ளைகளின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

பார்வைக்கு:

| | |
|---|---|
| Friday | 08 Oct 2021 10:00 AM - 5:00 PM |
| Saturday | 09 Oct 2021 1:00 PM - 3:30 PM |
| Sunday | 10 Oct 2021 1:00 PM - 3:30 PM |
| Monday | 11 Oct 2021 10:00 AM - 5:00 PM |
| Tuesday | 12 Oct 2021 10:00 AM - 5:00 PM |
| Wednesday | 13 Oct 2021 10:00 AM - 5:00 PM |

Oleahof Uitvaartzorg IJsselmeerstraat 63A, 1784 MB Den Helder, Netherlands

கிரியை:

| | |
|---|---|
| Thursday | 14 Oct 2021 1:00 PM - 4:00 PM |

Crematorium yardenhuis van Schagen Haringhuizerweg 3, 1741 NC Schagen, Netherlands

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
**அமிர்தரூபிணி(முத்து) - மகள்**
**+14167200594**

தகவல்:
**குடும்பத்தினர்.**







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 09.10.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்


**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
சிவஸ்ரீ.கு.வை.க வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர் இந்து குருமார் அமைப்பு



7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன்
ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
யாழ்ப்பாணம் வலயக்கல்வி
07.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK



11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு
**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- போஸ்
04.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை
**இரவு**
07.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு



07.30 மணி: மனிதனின் மறுபக்கம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி: சொல்லாடுகளம்
10.00 மணி : நெற்றிக்கண்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு
**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா
**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)
**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே
**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம்
(கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்
**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம்
மாதிரி வினாத்தாள்

**ஓம் ரிவி**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்
**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்
**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள்
(மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை
(சனி மறு ஒளிபரப்பு)
**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை
(திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம்
(மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு